# களத்தில்

உலக வரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் , எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (08.10. 1997 ) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (145) அன்பளிப்பு: 60 p


ஒதுக்கப்பட்ட மூன்று பிரிகேட்டில் ஒரு பிரிகேட்டை சிறிலங்கா இழந்தது

# ஜயசுக்குறு நடவடிக்கை தடுமாறுகிறது ஆனாலும் தொடர்வதில் சந்திரிகா உறுதி

"ஜயசுக்குறு" இராணுவ நடவடிக்கை பாரிய சவாலைச் சந்தித்துள்ளது. 110 நாள் சண்டையில் மட்டும் சுமார் 1200 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 3500 படையினர் காயமடைந்துள்ளனர். பல நூற்றுக் கணக்கான படையினர் படையை விட்டு ஓடி தலைமறைவாகியுள்ளனர். இந்த வகையில் ஏறக்குறைய ஒரு பிரிகேட் (5000 பேர்) அளவு படையினர் ஜயசுக்குறு கள முனையிலிருந்து அகற்றப் பட்டுவிட்டதாக "விடுதலைப் புலிகள்" ஏடு தெரிவித்துள்ளது.

ஜயசுக்குறு நடவடிக்கையை சிறிலங்கா மூன்று பிரிகேட்டுகளுடன் ஆரம்பித்ததாக தெரிவித்தது. இதில் ஒரு பிரிகேட் அளவு படையினரை இழந்த நிலையில் மிகுதி 2/3 பங்கினருடன் குறித்த நோக்கை நிறைவேற்றமுடியாது இராணுவத் தோல்வியை சிறிலங்கா சந்தித்துள்ளது. மேலும் விடுதலைப்புலிகள் சிறிலங்காப் படையினர் மீது சரமாரியான எறிகணைத் தாக்குதல்களை நடாத்துவதினால் சிறிலங்காப்படை புதியதோர் சவாலை எதிர்நோக்கவேண்டிய இக்கட்டான நிலையில் தவிக்கிறது. இலக்கு தவறாது ஏவப்படும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

முதல் பெண் மாவீரர் 2ம் லெப். மாலதி , லெப்.கேணல். குமரப்பா, லெப்.கேணல். புலேந்திரன் உட்பட 12 சக போராளிகளின் 10 ம் ஆண்டு நினைவு கட்டுரைகள் உள்ளே....

## சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில் அம்பாறையில் பகிரங்க இனஅழிப்பு

தமிழர்களின் கழுத்தை வெட்டுவோம் (தெமள பெல்ல கப்பனவா) எனச் சப்தித்தவாறு வந்த சிறிலங்கா பொலிசார் அம்பாறை 4ம் காலனி தமிழ் மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்ததில் 7 பேர் கொல்லப்பட 20 பேர் காயமுற்றுள்ளனர். இந்த சிறிலங்காப் படையினரின் காடைத்தனத் தினால் 45 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன.பகிரங்கமாக இனப்படு கொலை செய்யப்பட்ட தமிழ் மக்களில் 5 பேரின் சடலங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. வேலுப் பிள்ளை பாக்கியராசா, பொன் னையா சதாசிவம், கணபதிப்பிள்ளை குமாரசுவாமி, குமாரசுவாமி தங்கநாயகி ஆகிய

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## சிறிலங்கா தலைநகரில் பட்டப்பகலில் தமிழர் வீடு புல்டோசரால் இடிப்பு

வடபகுதிக்கு அத்தியாவசிய பொருட்களை லொறிகளில் ஏற்றி இறக்கிய கொழும்பு வாழ் தமிழ் வர்த்தகர் திரு. கோபாலபிள்ளையின் வீடு, கடந்த மாதம் 18ம் திகதி பிற்பகல் 2 மணியளவில் புல்டோசர் கொண்டு சிறிலங்கா பொலிசாரால் இடிக்கப்பட்டது.

திரு. கோபலபிள்ளை கடந்த மாதம் 16ம் திகதி சிறிலங்கா பொலிசாரால் அவருக்கு சொந்தமான லொறி ஒன்றிலே ஆயுதங்களை கொழும்புக்குள் கொண்டுவரட்டதென்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

பின்னர் காலை 18ம் திகதி காலை 11 மணியளவில் மீளவும் அவரது வீட்டிற்கு சென்ற பொலிசார் அவரது வீட்டைச் சோதனை இட்டனர். ஆயினும் அவரது வீட்டிலிருந்து இந்தச் சம்பவத்துடன் தொடர்பு படுத்தக்கூடிய எதையும்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## காணாமல் போன ஆயுதக்கப்பல் விவகாரத்தில் புலிகளுக்கு தொடர்பில்லை

### - விடுதலைப்புலிகள் அறிக்கை

இவ்வருடம் ஆடி மாதத்தில் சிறிலங்கா இராணுவத்திற்கு மோட்டார் குண்டுகள் ஏற்றி வந்த ஆயுதக் கப்பல் காணாமல் போன விவகாரத்தில் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். சிம்பாவேயிடம் சிறிலங்கா வாங்கிய மோட்டார் குண்டுகளை ஏற்றிவந்த கப்பல் இந்து சமுத்திரத்திலுள்ள மடகஸ்கார் தீவிற்கும் சிறிலங்காவுக்குமிடையில் காணாமல் போயுள்ளது.

இந்தக் கப்பல் பயணம் செய்து கொண்டிருக்கையில் விடுதலைப்புலிகளால் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு எந்தவிதமான ஆதாரமும் இல்லாத குற்றச்சாட்டாகும்.

சிறிலங்கா அரசாங்கத்தினரும், இராணுவ அதிகாரிகளும் ஆயுதக் கொள்வனவுகளின் போது ஊழல்களிலும், மோசடிகளிலும் ஈடுபட்டு வருவது அனைவரும் அறிந்ததே. இந்த ஊழல்களை மறைப்பதற்காகவே "காணாமல் போன கப்பல் கதை" சிங்கள அரசால் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச அரங்கில் உள்ள நற்பெயரிற்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் சர்வதேச கடற்கொள்ளைக்காரர்களாக, புலிகளைச் சித்தரிக்கும் உத்தியாக இது காணப்படுகின்றது" என அவ் அறிக்கை தெரிவிக்கிறது. ✷



கழுத்தில் நஞ்சைக் கட்டிய புலிகள் களம் கண்டஞ்சிய துண்டா ?

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளை நடத்திய

# விடுதலை கானம்பாடி 97

## யேர்மனி தழுவிய சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளை வருடந் தோறும் விடுதலைப் பாடகர்களை ஊக்குவிக்கும் முயற்சியாக 'விடுதலை கானம்பாடி' போட்டிகளை நடாத்தி வருகின்றது. வெளியாகியுள்ள தமிழீழ விடுதலைப் பாடல்களை மட்டுமே போட்டியாளர்கள் பாடலாம் என்ற நிபந்தனையுடன் ஆண்கள் -மேற்பிரிவு, பெண்கள்- மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு, இணைகுரற் பிரிவு என நான்கு பிரிவுகளாக பிரித்து இந்தப் போட்டி நடாத்தப்படுகின்றது. இந்த வருடத்திற்கான விடுதலை கானம்பாடி 1997, யேர்மனியின் அனைத்து நகரங்களிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு, மேற்பிரிவுப் பெண்களுக்கும் கீழ்ப்பிரிவினருக்குமான முதற் தெரிவுப்போட்டிகள், ஓகஸ்ட் மாதம் 31ம் திகதியும், மேற்பிரிவு ஆண்களுக்கான முதற்தெரிவு போட்டிகள், செப்ரெம்பர் மாதம் 07ம் திகதியும் நடாத்தப்பட்டது. சிறந்த குரல் வளமும் தமிழீழ மண்பற்றும் கொண்ட பாடகர்கள் விண்ணப்பித்துப்பங்கேற்று, ஆர்வமுடன் விடுதலைப் பாடல்களைப் பாடினர். டென்மார்க. நாட்டிலிருந்து சங்கீதபூஷணம் திலகேஸ்வரன், நோர்வே நாட்டிலிருந்து சங்கீதபூஷணம் பொன் சுபாஷ் சந்திரன், பரிஸ் நாட்டிலிருந்து கலைமாமணி குமுதா செல்வராஜா ஆகியோர் வருகைதந்து, நடுவர்களாகப் பணியாற்றினர்.

முதற்தெரிவுப் போட்டியிலிருந்து மிகச் சிறந்த பாடகர்களாக முப்பது பாடகர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மிகச் சிறந்த பாடகர்களிடையிலான இறுதிப்போட்டி சென்ற சனிக்கிழமை (13.09.97) எசன் நகரில் நடாத்தப்பட்டது.

இசை ரசிகர்களான பார்வையாளர்கள் மண்டபத்தை நிறைக்க, தமிழீழம் இசைக்குழுவினர் பின்னணி இசை வழங்க, போட்டியாளர்கள் மேடையிலே பாடினர். ஒவ்வொரு போட்டியாளரிடமும் வேறுபட்ட திறமைகள் பளிச்சிட்டன. கீழ் பிரிவினருக்கிடையிலான போட்டியின் போது, குழந்தைகளின் திறமையும் ஊக்கமும் எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இசையின் அசைவுகள், வார்த்தைகளின் அர்த்தங்கள் என உச்சரிப்பிற்கூட கவனம் எடுத்து சின்னஞ்சிறிய பாடகர்கள் பாடியபோது பாடகர்களின் பெற்றோர் எடுத்துக்கொண்ட கரிசனையை எல்லோரும் வியந்தனர்.



நடுவர் தீர்ப்பின் தொகுப்புரையின்போது, பொன் சுபாஸ் சந்திரன் அவர்கள் "இன்று விடுதலைப் பாடல்கள், தமிழிசை உலகிற்குள் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளன. இந்த மறுமலர்ச்சி தமிழிசையை வளர்த்து விட்டுள்ளது. இவ்வளவு ஆர்வங்காட்டி மேடையிலே அவை பாடப்படுவதும் பிரமாண்டமான ரசிகர்கள் அதில் மயங்கி மகிழ்வதும் நல்ல சகுனமே. இந்திய சினிமாவின் பாதிப்புக்கள், நமது இசை ரசனையைக் கெடுத்து கீழே கொண்டுபோய்க்கொண்டிருந்த காலகட்டத்தில், அவர்களுடைய இசையைப் பிரதி பண்ணுவதே நமது திறமையின் உச்சம் என்று இருந்த மயக்கம் கலைந்துள்ளது. இது எமது போராட்டத்தின் பெறுபேறுகளில் ஒன்றாகும். இங்கு யேர்மனியில் கண்ணன் சிறந்த முறையில் இசையமைத்து பணிபுரிகின்றார். இறுதிப்போட்டியிற் பாடிய அனைத்துப் பாடகர்களும் திறமையானவர்களே. பரிசுக்குரியவர்களை திறமையானவர்களுக்குள் இருந்து தெரிவு செய்ய நாங்கள் சிரமப்பட்டோம். இதுவே உங்களைப் பாராட்டச் சிறந்த வசனமாகும்" என கருத்துத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரிவினருக்குமான போட்டிகளின் முடிவின் போதும் விடுவிக்கப்பட்ட நடுவர் ஆலோசனை நேரங்களில், லூஸ்மாஸ்ரர் புகழ் ஐசாக் இன்பராஜா – கேதீஸ்வரன் குழுவினரின் இடைச்சிரிப்பு வேளை, வயிறு குலுங்க சிரிக்க வைத்தது மட்டுமல்லாமல் விடுதலை எண்ணங்களை விதைத்ததும் குறிப்பிடத்தக்கது. பன்னிரண்டு வருடங்களாக விடுதலைக்காக மட்டுமே இசைப்பணியாற்றிவரும் 'தமிழீழ இசைக்குழுவினது' கலைஞர்கள், அவர்களது புனித நோக்கத்திற்காக, மேடையில் தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்களால் மலர்ச்செண்டு கொடுத்து கௌரவிக்கப்பட்டனர். ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த முதல் மூன்று பாடகர்களும் 'விடுதலை கானம்பாடி 1997' ற்கான பட்டயமும் சான்றிதழும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். முதற்பரிசுக்குரிய பாடகர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. மிகச் சிறிய வயதான நான்கு வயதுப் பாடகரான சுதந்திரன் புலேந்திரனிற்கு சிறப்புப் பரிசாக அலங்கார மாவீரர் சின்னம் வழங்கப்பட்டது. பாராட்டிப்பேசிய விடுதலைப் புலிகளின் கலை -பண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் கா. சிவநாதன், ஒலிவாங்கி அளவு ஒரு பாடகர் நமது உள்ளங்களைக் கவர்ந்து கைதட்டல் வாங்கி நிற்கிறார் எனக் குறிப்பிட்டார்.

பரிசுகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளை பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்கள் வழங்கினார். பவித்திரா செல்வகாந்தனின் விடுதலை நடனம் இறுதி நிகழ்ச்சியாக இடம்பெற்றது. விடுதலைப் புலிகள் கலை – பண்பாட்டுக்கழக யேர்மனிக் கிளையின் நிகழ்ச்சி அறிவிப்பாளர் வலன்ரையின், நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினார். ✳

---

## சுதந்திர தரிசனம் தேடிடும் தமிழீழ மக்கள் ஸ்கொட்லாண்டிற்கு மேற்கொள்ளும் புரட்சிப் பயணம்.

மலர்ந்து வரும் ஸ்கொட்டிஸ் தேசத்திற்கும் தமிழீழ தேசத்திற்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கிய இராச்சியத்தின் பல பாகங்களில் வாழ்ந்து வரும் தமிழீழ மக்கள், எதிர்வரும் 25 ஐப்பசி 97 அன்று ஸ்கொட்டிஸ் தேசத்தின் நகரங்களில் ஒன்றான எடின்பேர்க்கிற்கு ஒரு புரட்சிப் பயணத்தை மேற்கொள்கின்றார்கள். இவ் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் கலந்து கொள்ள இலண்டனில் இருந்து 600 இற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் 'தமிழீழ – ஸ்கொட்லாந்து நட்புறவு புகையிரதம்' எனும் தனிப்பட்ட வண்டியில், எடின்பேர்க் செல்கின்றனர். இப்புரட்சிகர பயணத்தை ஒழுங்கு செய்திருக்கும் பிரித்தானியாவில் இயங்கும் தமிழீழ தேசாபிமான அமைப்புக்களின் கூட்டமைப்பாகிய பொதுநலவாயம் – 97இற்கான தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில், "இத்தினத்தில் பொது நலவாய அரசுகளின் தலைவர்கள் ஒன்றுகூடும் நிகழ்வும் எடின்பேர்க்கில் இடம்பெறுகின்றது. இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் தமிழீழ மக்களை ஈவிரக்கமின்றி அடக்குமுறைக்கு உட்படுத்தி, அவர்கள் மீது அப்பட்டமான இனப்படுகொலையினை கட்டவிழ்த்து விட்டிருக்கும் சிறிலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவும் கலந்து கொள்கின்றார். எடின்பேர்க் சென்றடையும் மக்கள் அங்கு, சிங்கள இனவாத அரசு தமிழீழ மக்கள் மீது நடாத்தி வரும் இனப்படுகொலையினை பொதுநலவாய அரசுகளின் தலைவர்கள் கவனத்திற்கும், ஸ்கொட்டிஸ் மக்கள் கவனத்திற்கும் கொண்டுவருவர்." என அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ்வரலாற்று நிகழ்வில் கலந்து கொள்ளும் 600இற்கு மேற்பட்ட தமிழீழ மக்களை உள்ளடக்கிய, 'தமிழீழ – ஸ்கொட்லாந்து நட்புறவு புகையிரதம்' பற்றி அமைப்பாளர்களைப் பேட்டி கண்டபோது, இப்புகையிரதம் இலண்டனில் உள்ள King's Cross புகையிரத நிலையத்தில் இருந்து காலை 7 மணிக்கு புறப்பட்டு பிற்பகல் 12 மணியளவில் எடின்பேர்க்கில் உள்ள Waverley புகையிரத நிலையத்தினை சென்றடையும் எனவும், இப்புகையிரத நிலையத்தினை சென்றடையும் மக்கள் அங்கிருந்து பேரணியாக புறப்பட்டு Waverley வாணிக ஸ்தலத்தினில் அமைக்கப்பட்டிருக்கும் 'தமிழீழ கூடாரத்தினை சென்றடைவர் எனவும் தெரிவித்த அதன் அமைப்பாளர்கள் மேலும் தெரிவிக்கையில், அங்கு பிற்பகல் 12–30 மணிக்கு தமிழ்க் கலாச்சார விழா ஆரம்பமாகும் எனவும் இவ்வரலாற்று நிகழ்வில் ஸ்கொட்டிஸ் மக்களும் பத்திரிகையாளர்களும் கலந்து கொள்வர் எனவும் தெரிவித்துள்ளனர்.

மாறிவரும் உலக அமைப்பில் மலர்ந்து வரும் இரு வேறு அடையாளங்களைக் கொண்ட தேசங்களே தமிழீழமும் ஸ்கொட்லாந்தும் ஆகும். சர்வஜனவாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தி, அதில் வெற்றி கண்டிருக்கும் ஸ்கொட்டிஸ் மக்களிற்கு உலகெங்கனும் சிதறி வாழ்ந்து வரும் தமிழினம் தனது மனம்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

"ஸ்கொட்டிஸ் மக்களின் தனித்துவத்தை அமைக்க ஸ்கொட்டிஸ் மக்களின் முன்தான் வாக்கெடுப்பு வைக்கப்பட்டது. ஆனால் இலங்கையில் தமிழர் உரிமைக்கான வாக்கெடுப்பை சிங்கள இனவாதம் சிங்கள மக்களின் கைகளிலேயே விடுகிறது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்." என தனது வியப்பினை அதன் அறிக்கையில் பொதுநலவாயம் –97இற்கான தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

300 வருடங்களிற்கு மேலாக பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருக்கும் ஸ்கொட்டிஸ் தேசம் இன்று எவ்வாறு 1997 இல் புதிய ஸ்கொட்லாண்டிற்காக வாக்களித்ததோ, அவ்வாறே தமிழீழ தேசத்தினை மீளமைக்கும் விருப்பினை ஏகோபித்த மனதோடு 1977இல் தமிழீழ மக்கள் ஜனநாயக ரீதியாக வெளிப்படுத்தினர். ஆயினும் தமிழீழ தேசத்தின் சுயநிர்ணய உரிமையை மறுத்தும் அவர்கள் மீது ஈவிரக்கமற்ற இராணுவ நடவடிக்கைகள் உட்பட்ட பலரக இனவெறியாட்ட நடவடிக்கைகளை சிங்கள – பௌத்த பேரினவாத அரசு மேற்கொண்டு வருகின்றது. இன்று இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் சிங்களக் கட்டாக்காலி இராணுவம் தமிழ் இளைஞர் – யுவதிகளை கைது செய்து, சித்திரவதைக்குட்படுத்திப் பின் அவர்களைக் கொல்வதையும், தமிழ்ப் பெண்களை பாலியல் வல்லுறவுகளிற்கும் பாலியல் சேட்டைகளிற்கும் உட்படுத்தி வருவதும் அனைவரும் அறிந்ததே.

அண்மையில் யாழ்குடாநாட்டில் 6 வயதுச் சிறுமி ஒருத்தி மீது சிங்கள இராணுவ வெறியர்கள் பாலியல் வல்லுறவை மேற்கொண்டு தம் வெறியை தீர்த்த சம்பவம், சிங்கள இனவாதத்தின் தமிழின அழிப்பு நோக்கினை நிதர்சனப்படுத்தி நிற்கின்றது. ✳

# சிங்கள இறைமை ஏற்கப்பட மாட்டாது

"நாம் சிறிலங்கா அரசின் திட்டங்களுக்கோ, கட்டளைகளுக்கோ எந்நேரத்திலும் கட்டுப்படமாட்டோம். அவற்றினை அங்கீகரிக்கவும் மாட்டோம்" எனச் சூளுரைத்து, அதனை முறியடிப்பதற்கு இந்திய அமைதிப் படையும், சிறிலங்கா அரசும் கூட்டுச்சதி செய்தபொழுது, தங்கள் இன்னுயிர்களையே ஈகம் செய்து தமிழீழ மக்களின் போராட்ட உறுதியை உலகுக்கு உணர்த்திய எங்கள் தளபதிகள் லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் மற்றும் போராளிகள் மேஜர் அப்துல்லா, கப்டன் நளன், கப்டன் மிரேஸ், கப்டன் பழனி, கப்டன் கரன், கப்டன் ரகுவப்பா, லெப். அன்பழகன், லெப். தவக்குமார், 2ஆம் லெப். றெஜினோல்ட், 2ஆம் லெப். ஆனந்தக்குமார் ஆகிய பன்னிருவரதும் வீரவரலாற்றின் பத்தாவது ஆண்டு இம்மாதம் ஐந்தாம் திகதியுடன் நிறைவுறுகிறது.

இதேபோன்று சிறிலங்கா அரசின் இறைமை, இராணுவ பலாத்காரமாக மாறி தமிழர் வாழ்வையே மறுத்தமை கண்டு தமிழீழப் பெண்கள் வீராவேசத்துடன் தம்மக்களின் வாழ்வுக்காக போராடப் புறப்பட்டமை தமிழீழ தேசத்தின் வரலாறு. தமிழீழப் பெண்களின் முதல் மாவீரரான 2ம்.லெப். மாலதியின் நினைவோடு அக்டோபர் மாதத்தில் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் இடம்பெறுகிறது.

இம் மாதத்தின் இவ்விரு வரலாற்று நினைவுகளும் "நாம் சிறிலங்கா அரசின் இறைமையை ஏற்கமாட்டோம். எமது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்க உரிமை உள்ள மக்கள் நாமே" என்ற தமிழீழ மக்களின் உறுதிப்பாட்டை உலகுக்கு உணர்த்துகின்றன. ஆயினும் சந்திரிகா அரசு இந்த உறுதிப்பாட்டை முதலில் நயமாகவும் பின்னர் பயமுறுத்தலினாலும் முறியடிப்பதையே தமிழர் பிரச்சினைக்கான தீர்வாக்க முயற்சிக்கிறது.

ஆனால், 1995 அக்டோபர் 30 ஆம் நாளில் தமிழீழ மக்களை விடுவிக்கப்போவதாக வெளிஉலகுக்கு கூறிக்கொண்டு தமிழ் மக்களை ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தி அவர்களை அடிமைகளாக்கும் நோக்குடன் யாழ்குடாநாட்டைக் கைப்பற்ற சந்திரிகாவின் படைகள் முற்பட்ட மாத்திரத்தில் விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட வன்னிக்கு தமிழ் மக்கள் பாரிய அளவில் இடம்பெயர்வை மேற்கொண்ட நிகழ்வானது, தமிழீழ மக்கள் ஒருபோதும் சிங்கள அரசின் இறைமையை ஏற்க மாட்டார்கள் என்பதை உலகுக்கு நிதர்சனப்படுத்தியது.

இருந்தபோதிலும் மக்கள் மீதான போர், மக்கள் மீதான முற்றுகை போன்ற சர்வதேச போர்க்குற்றச் செயல்கள் மூலம் தமிழீழ மக்களின் பாரிய இடப்பெயர்வை ஓரளவிற்குத் தடுத்து நிறுத்திய சந்திரிகா அரசு, யாழ். குடாநாட்டை இராணுவ வேலிகளால் சூழப்பட்ட திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாற்றியுள்ளது.

அதேவேளை, வன்னிப் பிரதேசத்தின் சுதந்திர வாழ்வுக்கும் ஊறுவிளைவிக்கும் விதத்தில் உணவை ஆயுதமாகவும், மருத்துவ வசதிகளை தடைசெய்தும் மனிதத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்துவரும் சிறிலங்கா ஆக்கிரமிப்பு அரசு, கூட்டு மொத்தமாக தமிழீழமெங்கும் வான்வழி விமான தாக்குதல்கள், குண்டு வீச்சுக்கள், எறிகணைக் தாக்குதல்கள் உட்பட்ட போர் நாசகார விளைவுகளை மக்களுக்கும் தமிழ் மக்களின் உட்கட்டுமானங்களுக்கும் ஏற்படுத்தி வருகின்றது.

ஆயினும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தேச மீட்பு நடவடிக்கைகளினால் சிங்களப் படையினர் வரலாறு காணாத இராணுவத் தோல்விகளைத் தழுவி வருவதும் அல்லாமல் விடுதலைப் புலிகள் தரைவழி – கடல்வழி – வான்வழி சண்டைகளை நடாத்துவதற்கான ஆயுத இராணுவத் தளபாட வசதிகளையும் விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்து வருகின்றனர். இதனால் விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமை முன்பை விட பலமடங்கு பெருகி வருவதை சமீபத்திய வரலாற்றுச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

சிங்களவர்களுக்கு சிங்களத் தேசியத்தை பாதுகாப்பதற்கான ஆணைக்குழுக்களும் அரசியல் திட்ட பாதுகாப்புகளும் தாராளமாக வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழர்களுக்கோ தமிழீழத்திற்கு உள்ளும் வெளியும் சிங்கள ஆயுதப்படைகளின் அச்சுறுத்தல்கள் தமிழ் தேசியத்தை சிதைப்பதற்கான ஆயுத ஒடுக்குமுறையாக வெளிப்பட்டு வருவதைக் காணலாம். இது தமிழ் மக்களுக்கு அவர்களது பாதுகாப்புக்கான ஒரு இராணுவத்தின் தேவையை வெளிப்படுத்தி நிற்கிறது. அதுவே தமிழீழ விடுதலைப்புலிகள் எனும் தமிழர் இராணுவமாக பரிணமித்து நிற்கிறது.

மேலும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தலைமை அமைப்பாக உள்ள சிறிலங்கா அரசாங்கத்திற்கு உரிமை எதுவும் இல்லை. ஆதலால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையே ஆக்கபூர்வமான தீர்வைத்தரும். இது மூன்றாம் நாடொன்றின் மத்தியத்தத்துடன் நடைபெறவேண்டும் எனக் கூறும்பொழுது சர்வதேச மத்தியத்தம் வேண்டாம், இது உள்நாட்டு பிரச்சினை எனக்கூறும் சந்திரிகா, தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை நெறிப்படுத்துவதற்கு சர்வதேச உதவிகளை தாராளமாக பெற்றுக்கொள்ளும் பொழுது மட்டும் சர்வதேசத்தை வேண்டாமெனக் கூறியதில்லை.

இந்த உண்மைகளை எடுத்து நோக்கின் சிங்கள இறைமை தமிழர்களால் ஏற்கப்படமாட்டாது. எனவே சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழர்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து, தமிழர் தாயகம் மீதான ஆக்கிரமிப்பு படைகளை விரட்டுவதற்கான அழுத்தங்களை சிறிலங்கா மீது பிரயோகித்து, மூன்றாம் நாடொன்றின் மத்தியத்தினூடாக விடுதலைப்புலிகளுடன் சிறிலங்கா அரசை பேசவைப்பதன் மூலமே தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான அமைதி கிடைக்கும். இதுவே மாவீரர்கள் மாலதி முதல் பன்னிரு மாவீரர்கள் வரை நேசித்த தேசவிடுதலை கிடைக்க வழி . இதற்காக புலம்பெயர் தமிழர் உழைப்பதே இம்மாவீரர்களுக்கு நாம் செய்யக்கூடிய அஞ்சலி. ✳

# 21ம் நூற்றாண்டை நோக்கி

யுத்தம் தொடர்ந்துகொண்டிருப்பினும், பொருளாதார சுபீட்சத்துடன் 21ம் நூற்றாண்டைப் பிரவேசிப்பதற்காக நாட்டைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறோம் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, சில தினங்களின் முன்னர் கூறியுள்ளார். அதாவது, 21ம் நூற்றாண்டுக்குள் சிறீலங்கா அரசை வெற்றிகரமாக வழிநடத்திச் செல்ல தாம் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார். ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் சிறீலங்கா அரசாங்கம் 21ம் நூற்றாண்டுக்குள் பிரவேசிக்கப் போவது உண்மைதான், ஏனெனில், 2000 ஆண்டுவரை பெரும்பாலும் சந்திரிகா குமாரதுங்காவின் ஆட்சியே நீடிக்க வாய்ப்புண்டு. நீடித்துக் கொள்வதற்கான வாய்ப்பும் உண்டு. அதாவது, அவரது தற்போதைய ஜனாதிபதி காலம் 2000 ஆண்டு வரையும் அரசியல் யாப்பு பரிகாரம் நீடிக்க வாய்ப்புண்டு. ஆகையால், ஜனாதிபதி சந்திரிகாவின் வழிகாட்டலில் 21ம் நூற்றாண்டுக்குள் சிறீலங்கா செல்வது என்பது என்னவோ உண்மைதான். ஆனால், அவர் கூறுவது போன்று 21ம் நூற்றாண்டை சிறப்பான ஒரு வழிகாட்டலில் எதிர்கொள்ள சிறீலங்கா தயாராகின்றது என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில், சந்திரிகா குமாரதுங்கா பதவிக்கு வருமுன்னர் இலங்கையில் தேனும் பாலும் ஓடச் செய்வேன், நாட்டில் பஞ்சம் ஒழிக்கப்பட்டு பொருளாதார சுபீட்சம் கட்டி எழுப்பப்படும் என்று வழங்கிய வாக்குறுதிகள் எல்லாம் இன்று மறைக்கப்பட்ட விடயமாக மாறிவிட்டன. மறுவளமாக வேலை இல்லாப்பிரச்சினை அதிகரிப்பு, விலைவாசி ஏற்றம் என்பவற்றில் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கையில் அரசாங்கமோ அரசுச் சொத்துக்களை விற்பனை செய்வதில் ஆர்வமாக உள்ளது. ஆனால், யுத்தத்திற்கான பெரும் நிதித்தேவையை தனியார்மயமாக்கல் மூலம் சேகரிக்க எத்தனிக்கின்றது. இந்த நிலையில் 21 ம் நூற்றாண்டைக் காண்பதற்கு தயாராவது என்பது, அரச உடமைகள் யாவற்றையும் ஒட்டுமொத்தமாக வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்றுவிடுவது என்பதே அரசின் இலக்கு என எண்ண வைக்கின்றது. ஏனெனில், இதைத்தவிர வேறு எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளிலும் அது ஈடுபடுவதாக இல்லை. மறுவளமாக நாட்டைச் சீரழிக்கும் யுத்தத்திலேயே அரசாங்கம் மிக அக்கறை காட்டுவதாக உள்ளது. எவ்வளவு செலவு செய்தாயினும் யுத்தத்தைத் தொடரவே அரசாங்கம் விரும்புகின்றது. இந்நிலையில் 21ம் நூற்றாண்டுக்குள் நாட்டை திறம்பட வழி நடத்திச் செல்வதில் அரசாங்கம் தீவிர அக்கறையாக உள்ளது என எதனை அடிப்படையாக் கொண்டு கூறுகின்றது.

## அபாயகரமான நடவடிக்கை

சிறீலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வவுனியாப் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றங்களை அமைப்பதற்கு சந்திரிகா அரசு தீர்மானித்துள்ளது. இத்தீர்மானத்தில் இராணுவத்தின் பங்கு பெரிய அளவில் இருப்பதாகத் தெரிய வருகின்றது. தமிழர் தாயகப் பகுதியை சிங்கள அரசாங்கம் ஆக்கிரமிக்க முனைவதும் அதற்கு அடிப்படையாகப் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதும் புதியதொரு விடயமல்ல. ஆனால், தற்பொழுது இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவது முன்னைய நிலைப்பாட்டை விட சற்று வேறுபட்டதாகும். அதாவது முன்னர் குடியேற்றங்கள் நிறுவப்படும் தீர்மானங்களைக் கொண்டு வருவதில் அரசியல்வாதி பங்கு முழுமையாக இருந்ததெனில், தற்பொழுது இதற்கான

தொடர்ச்சி 6 ம் பக்கம்.....

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **07- 11 - 1997** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**



# பிடரியில் கால்பட பின்வாங்கும் ஜெசுக்குறுய் படையணி!

## வெற்றிகரமாக இராணுவத்தை விரட்டியபடி முன்னேறும் புலிகள்!

யாழ்குடாநாட்டுக்கான தரை வழிப்பாதையைத் திறக்கும் நோக்குடன் சிங்கள் அரசால் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படும் ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கை படுதோல்வியைத் தழுவி வரும் நிலையில், கடும் விரக்திக்கு உள்ளாகியிருக்கும் சிங்களப்படைகளால் 05-10-97 அன்று, கற்கிடங்கு நோக்கியும் கறிபட்டமுறிப்பு நோக்கியும் பெரும் எடுப்புடன் மேற்கொள்ளப்பட்ட இருமுனைத் தரைநகர்வு முயற்சி விடுதலைப் புலிகளின் உக்கிரமான எதிர்த்தாக்குதலினால் முறியடிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் 30இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட, ஏனையோர் படுகாயமடைந்தவர்களையும் தூக்கிக் கொண்டு ஓடித்தப்பித்துக் கொண்டனர். இத்தாக்குதலில் ஏ.கே.எல். எம்.ஜிக்கள் ஆறு, ஆர்.பீ.ஜீ ஒன்று உட்பட பல்வேறு ரக ஆயுதங்களும், ரவைகளும், இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ் வீரமிகு தாக்குதலில் 22 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். தாயக விடுதலைக்காக தம்முயிரை ஆகுதியாக்கிய இவ் வேங்கைகளிற்கு எமது வீர வணக்கங்கள்.

இவ்விதழ் அச்சுக்குப் போகும் வரை களத்திலிருந்து கிடைத்த செய்திகளின் படி, முன்னேற முற்பட்ட இராணுவத்தின் முயற்சியை முறியடித்த புலிகள், இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களை நோக்கி வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருப்பதாகவும், எந்நேரத்திலும் பாரிய தாக்குதலைப் புலிகள் தொடுக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அரவந்தலாவை இராணுவ - பொலிஸ் கூட்டுமுகாம் புலிகளால் தாக்கி அழிப்பு.

### 14 சிங்களத் துருப்புக்கள் பலி.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரவந்தலாவைப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ - பொலிஸ் கூட்டுமுகாம் மீது 06-10-97 அன்று, காலை 1.05 மணிக்கு, விடுதலைப் புலிகள் நடாத்திய வெற்றிகரமான தாக்குதலில் 14 சிங்களப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வெற்றிகரமான தாக்குதலில் இரண்டு 60மி.மீ மோட்டார்கள் உட்பட பல நவீன ரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இவ்வீரமிகு தாக்குதலில் 12 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். தாயக விடுதலைக்காக தம்முயிரை ஈந்த இத்தியாகிகளிற்கு எமது வீரவணக்கங்கள்.

## பேச்சுவார்த்தை தோற்றமைக்கு சிங்களக் கட்சிகளே காரணம்!

### அமைச்சர் பீரிஸ் விளக்கம்.

பேச்சுவார்த்தைகள் முறிவதற்கு புலிகளே காரணம் என அரசு சர்வதேச மட்டத்தில் உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருவது அனைவரும் அறிந்ததே. இந்நிலை இவ்வாறு இருக்க, முன்னைய பேச்சுவார்த்தைகள் தோற்றமைக்கு இரு பிரதான சிங்களக் கட்சிகளும் இணைந்து நம்பத்தகுந்த தீர்வுகளை முன்வைக்காமையே காரணம் என சிங்கள அமைச்சர் பீரிஸ் கூறியுள்ளார்.

இதற்கு ஒத்த கூற்றினை, சிறிலங்காவுக்கான பிரித்தானிய தூதுவர் திரு.டேவிட் தாதம் அவர்கள், அண்மையில் வெளிப்படுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. "எந்த நாட்டிலும், அந்த நாட்டு அரசுகள், அந்நாட்டு மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்த முடியாதென" பிரித்தானிய தூதுவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தமையும் இங்கு அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

## யாழ் குடாநாட்டில் எழுச்சியுறும் மக்கள் எதிர்ப்பலைகள்

காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தினர், அன்னையர் முன்னணியினர் உண்ணாவிரதம் சென்ற மாதம் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று யாழ். சஞ்யுவானியார் கோவில் முன்றலில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஒருங்கு திரண்டு காணாமல் போன தங்களின் பிள்ளைகள், கணவன், மனைவி உற்றார் உறவினர் நண்பர்களைப் பற்றிய விபரங்களை வழங்குமாறு சிறிலங்கா அரசாங்கத்தை வற்புறுத்தி உண்ணாவிரதம் இருந்தனர். காலை 8 மணிக்கு ஆரம்பமான உண்ணாவிரதம் மாலை 4 மணி வரை தொடர்ந்தது. இதற்கு முன்னர் இத்தகைய உண்ணாவிரதம் ஒன்று சென்ற மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் நடைபெற்றது.

கைது செய்யப்பட்ட காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் இவ் உண்ணாவிரதங்களை ஒழுங்கு செய்து வருகின்றன.

தங்களுக்கு பதில் அளிப்பதில் சிறிலங்கா அரசு அலட்சியம் செய்தால் தாங்கள் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளப்போவதாக இவர்கள் எச்சரித்துள்ளனர். ❑

## முக்கொலை குறித்து விசாரிக்குமாறு மதகுருமார் கோரிக்கைக் கடிதம்.

கிளிநொச்சியில் சிங்களப்படைகளால் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த வண.பிதா அருட்பாலனினதும், மற்றைய இருவரினதும் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு கத்தோலிக்க மதக்குருக்கள் சிங்கள ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கோரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளனர். இது இவ்வாறிருக்க சிங்களப்படைகளின் கிளிநொச்சி மக்கள் மீதான தாக்குதல்கள் இன்னமும் குறையைவில்லை என அறியப்படுகின்றது. ❑

## சர்வதேச சட்டங்களுக்கு . . .

4ம் காலனியைச் சேர்ந்த தமிழர்களும் வீரமுனையைச் சேர்ந்த வள்ளிக்குட்டி சுந்தரலிங்கமும் கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டவர்கள் ஆவர்.

சிறிலங்காப்படையினரின் இவ் இனக்கொலைகுறித்து இச்சம்பவத்தில் காயமடைந்த 46 வயதான வேலாயுதம் பேரின்பராசா என்பவர் ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருந்தவாறு விளக்குகையில், "எமது ஊரிலிருந்து முக்கால் மைல் தூரத்திலுள்ள றத்தா வீட்டடி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிசாரே எம் ஊரை நோக்கிச் சுட்டபடி வந்த பொலிசார் ஆவர். இவர்கள் கறுத்த ரீ-சேட் காக்கி லோங்ஸ் அணிந்து சுமார் 50 பேரளவில் காணப்பட்டனர். இவர்கள் தமிழர்களைக் கழுத்தை வெட்டிக் கொல்லுவோமென சப்தித்தவாறே சுட்டனர். என்னிலும் குண்டு பட்டு நான் காயமுற்று விழுந்த போது அருகிலிருந்தவர்கள் அரோகரா முருகா எனச் சப்தமிட்டவாறு நாலு புறமும் சிதறி ஓடினர். நாலாபுறமும் புகைமண்டலமாக இருந்தது. சென்ரல் காம்ப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிசார் ஒருவரே என்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். எனது ஊரிள் வந்து வன்முறையில் ஈடுபட்டவர்களை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களை அடையாளம் காட்டவும் முடியும்" எனக் கூறியுள்ளார்.

இந்தச் சிறிலங்காப்படையினரின் பகிரங்க இனக்கொலையினை அடுத்து 375 குடும்பங்களைச் சேர்ந்த 1398 பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தின் தமிழ்க் கிராமமான நாலாம் காலனி மீது சிறிலங்காப்படையினர் நடாத்திய இனக்கொலைகள் அந்தக் கிராமத்தில் இருந்து தமிழ் மக்களைத் துரத்துவதற்கான முயற்சியாகும். தமிழீழ தேசத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியே 1963 ம் ஆண்டு அம்பாறை மாவட்டமாக பிரிக்கப்பட்டது. கல்லோயா அபிவிருத்தித்திட்டக் குடியேற்றங்கள் மூலம் 40 குடியிருப்புகள் உருவாக்கப்பட்டு அதில் பத்துக்கும் குறைவான குடியிருப்புக்கள் மட்டுமே தமிழர்க்கு வழங்கப்பட்டு, சிங்களமயமாக்கல் நடாத்தப்பட்டது. தற்பொழுது இப்பகுதிகளை முழுமையான சிங்களப் பிரதேசங்களாக மாற்ற, மிகுதியாகவுள்ள தமிழ்க்கிராமங்கள் மீதும் இத்தகைய இன அச்சுறுத்தல்கள், இன அழிப்புகள் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் இத்தகைய முறையில் திருகோணமலை மாவட்டத்திலும் பகிரங்க இன அழிப்புகள் நடாத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ✷

## ஜயசுக்குறு நடவடிக்கை . . .

புலிகளின் எறிகணைகள் தமது படையினருக்கு அதிகளவு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்துவதாக சிறிலங்காப்படைத் தளபதிகள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர். அத்துடன் நகர்வுச்சண்டையில் குருவி சுடுவது போல் டாங்கிகளைப் புலிகள் வீழ்த்துவதினால் சிங்களப்படையினர் அவநம்பிக்கையையும் மனச்சோர்வையும் அடைந்து வருகின்றனர்.

மேலும் வவுனியா - கிளிநொச்சி பாதையைக் கைப்பற்றி அதனைத் தக்கவைத்துக் கொள்ள இவ்வளவு படையினர் தேவை என சிங்களத் தளபதிகள் கணித்த கணிப்பு பிழைத்து விட்டது என்பதையும் புலிகள் புதிய கணக்கொன்றை தந்து விட்டனர் என்பதையும் சிங்களத்தின் களமுனைத் தளபதிகள் நன்கு உணர்ந்து விட்டனர்.

ஆயினும் சந்திரிகா அரசு தனது அரசியல் எதிர்காலம் இந்த ஜெயசுக்குறு நடவடிக்கையின் வெற்றியில் தங்கியுள்ளது எனக் கருதுவதினால் தொடர்ந்தும் யுத்தத்தை தொடர்வதிலேயே ஆர்வம் காட்டி வருகிறது. கடைசியாகக் கிடைத்த செய்திகளின்படி சென்ற மாதம் 30ம் திகதி கனகராயன்குளம் நோக்கி முன்னேற முற்பட்ட சிறிலங்காப் படையினரை தமிழீழ விடுதலைப்புலிகள் தடுத்து தாக்கியதில் 50 க்கு மேற்பட்ட சிறிலங்கா படையினர் கொல்லப்பட்டும் 100 க்கு மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். ❑

## சிறிலங்கா தலைநகரில் . . .

பொலிசார் கண்டுபிடிக்கவில்லை என அவரின் மகன் கூறினார். அன்று மதியம் 2 மணியளவில் புல்டோசர் ஒன்று மதிலை உடைத்துக் கொண்டு உள்நுழைந்து முன் உள்ள விருந்தினர் வரவு மண்டபத்தை இடித்துத் தள்ளியுள்ளது. உள்ளே நுழைந்த பொலிசார் ஆட்களை பின்னால் செல்லச் சொல்லிவிட்டு ஸ்டோர் அறை ஒன்றையும் உடைத்துள்ளனர்.

கடந்த வருடமும் இவ்வாறு வெள்ளவத்தை ராசவள்ளி ஒழுங்கையில் ராமேந்திரா என்பவரின் வீட்டையும் சிறிலங்கா இரகசிய உளவுப் பொலிசார் புல்டோசர் கொண்டு இடித்தனர்.

பலஸ்தீனியர்களின் வீடுகள் இஸ்ரேலில் இவ்வாறு இடிக்கப்பட்டமை, இச்சம்பவத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

தமிழ் மக்களுக்கு, இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகள் பகிரங்கமாக நடாத்தப்பட்டு பின்னர் நீதி விசாரணைகள் ஏதுமின்றி சிறிலங்கா அரசால் மூடி மறைக்கப்பட்டு வருகின்றது. ❑

# அவர்கள் அவர்களுக்காக அல்ல.

**பலாலியில் வீரமரணமடைந்து தீருவில் தீயுடன் கலந்து விட்ட லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல். புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 10ம் ஆண்டு நினைவாக ....**

மாரி காலக் கடல்

03-09-97

ரகுவும் பழனியும் அலைகளை ஊடுருவி- இருளைத் துளைத்து-எப்போதும் பழக்கப்பட்ட தமது கண்களால் பார்த்தார்கள்... சிறிலங்கா கடற்படைப் படகு அவர்களை நோக்கி மின் பாய்ச்சலில் வந்து கொண்டிருந்தது.....

'கடற்புறாவை' விரைவாக செலுத்த முயன்றார்கள்.

இயலவில்லை.

புலிகளின் விரைவுப் படகுகளில் ஒன்றல்ல 'கடற்புறா' என்பது அவர்களுக்குத் தெரியும்.

பருத்தித்துறைக் கடலில் மலைகளாய் எழுந்து அலைகள் வெறிக்கூத்தாடின.

பதினேழு விடுதலைப் புலிகள் 'கடற்புறாவில்' இருந்தார்கள். லெப். கேணல் குமரப்பா, புலேந்திரன் உட்பட...

நிலைமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

சிறிலங்கா அரசின் கொடுமைகள் சிறிதும் குறையவில்லை. வல்லாளுமையாளரின் வெறித்தனங்கள்......

இந்தியாவும், சிறிலங்காவும் சேர்ந்து விரித்த வலை இறுக்கமாக இருந்தது.

பதினேழு விடுதலைப் புலிகளும் நடுக்கடலில் கைதாகி அன்றிரவு சிறிலங்கா கடற்படைக் கப்பலில் ஏற்றப்பட்டார்கள்.

பழநி எதிரியின் கப்பலில் இருந்து கொண்டே கடலைப் பார்த்தான். பின்பு நீண்டகால நண்பன் ரகுவைப் பார்த்துச் சொன்னான்:

"ஆசையோடு நாம் விளையாடித் திரிந்த கடல்"

முன்பொருநாள்-

சிங்கள சிறிலங்காப் படைகளை எதிர்த்து தமிழீழம் வீறு கொண்டு போராடிய காலம்.

27-10-1986 மாலை நான்கு மணி.

தமிழ்நாட்டுக் கடற்கரையில் இருந்து பயிற்சி முடித்த விடுதலைப் புலிகளின் முதற் பெண்கள் படைப்பிரிவு, தமிழீழம் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

கழுத்துகளில் 'சயனைட்' மாலைகள் - சிரித்த கலகலப்பான பேச்சு - களம் பார்க்கும் தாகம் - பத்துப் பெண் விடுதலைப் புலிகள் படகில் உட்கார்ந்திருந்தார்கள்.

தமிழீழக் கரையில் அவர்களைச் சேர்க்கும் பொறுப்பு ரகுவப்பாவிடமும், பழநியிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

படகைக் கடலில் தள்ளிவிட்டு எல்லோரையும் பார்த்துப் பழநி சொன்னான்:-

சிரிக்கிறீங்க......... ஒண்டு சொல்லுறன்.... வழியிலை சிலவேளை நேவிக் கப்பல் வரலாம்....... "ஹெலி துரத்தலாம்..... அசையாதீங்கோ.... பதட்டத்திலை குப்பியைக் கடிச்சுப் போடாதேங்கோ....."

உறுமிக் கொண்டு மின்விசைப்படகு கடலில் பாய்ந்தது.

பெண்களில் ஒருத்தி சொன்னாள்:

"பயப்படாதேங்கோ எண்டு சொல்லி எங்களை அவமானப்படுத்திறீங்கள் பழநி அண்ணா!"

பழநி தனக்குள்ளாகச் சிரித்துக்கொண்டான். ரகுவப்பாவும் பழநியும் வல்வெட்டித் துறையில் பேர் போன படகு ஓட்டிகள்...... உறுதி வாய்ந்த விடுதலைப் புலிகள்.

கடற்படைப் படகுகள் துரத்த - பலமுறை அவர்கள் எதிரியின் கண்ணில் மண்ணைத் தூவி - கடலைக் கிழித்துப் பறந்திருக்கின்றார்கள்.

பலதடவை கடற்போரில் அவர்கள் ஈடுபட வேண்டியிருந்தது. கடற்படையோடு எத்தனையோ முறை மோதியிருக்கின்றார்கள். நாகர் கோவில் கடற்கரையில் சிறிலங்கா 'ஹெலிக்கொப்டர்' ஒன்றை அவர்கள் தாக்கி வீழ்த்திய போர் உணர்ச்சி மயமானது.

தமிழீழக் கடலலைகள் கொந்தளித்த வண்ணமே இருந்தன.

கப்பலில் இருந்து அடிக்கடி மத்தாப்புக்கள் வானத்தில் வெடிக்கப்படும். கடலில் பெரிய வெளிச்சம் அடிக்கும். படகுகள் பளிச்சென்று அடையாளம் காணப்படும். படகை நோக்கிக் குண்டுகள் பறக்கும்....

இந்தக் கடலில் தான் ரகுவப்பாவும், பழநியும் விடுதலைப் புலிகளை ஏற்றி இறக்கினார்கள். அவர்களுடைய படகோட்டம் விடுதலைப் புலிகளின் வீரம் நிறைந்த ஒரு பகுதியே.....

காரிருள் வானத்தை மூடத்தொடங்கிற்று. கடலும் வானமும் இருளாகிக் கொண்டு வந்தது. அவர்கள் இப்போது நடுக்கடலில் இருந்தார்கள்.

இரவு ஆறரை மணி.

திடீரென்று... படகை யாரோ வலிய கைகளால் பற்றி இழுத்தது போன்ற அதிர்ச்சி.

அலைகள் 'ஓ' என்று மோதித் தெறித்தன.

கண்களின் முன்னால் படகு உள்ளே குப்புறக் கவிழ்ந்தது. மீனுக்கு விரித்த வலைகளில் ஒன்றில் படகின் வெளி இயந்திரங்கள் சிக்கி....

"பொலித்தீன் பொதிகளைப் பிடித்துக் கொள்ளுங்கோ..." என்று உரக்கக் கத்தினான்.

'பொலித்தீன்' பொதிகளோடு பெண்புலிகள் உட்பட அனைவரும் கோர அலைகளில் மிதந்தார்கள். ஒரு பொதியோடு லெப். துர்க்கா..... (இவள் பின்னர் உடையார் கட்டுக் காட்டுக்குள் இந்திய ஆக்கிரமிப்புப் படையோடு நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்தாள்.)

வசந்தி கவிழ்ந்த படகை பற்றிக் கொண்டு மிதந்தவள் "ஐயோ...! பழநி அண்ணா இவள் ஒருத்தி குப்பியைக் கடிக்கிறாள்..." என்று கூச்சலிட்டாள்.

அந்தப் பெண்புலி அப்போது வசந்திக்கு அருகில் மிதந்து கொண்டிருந்தாள். கடல் அலைகள் பொங்கி விழுந்து புரண்டன....

ரகுவப்பா மீண்டும் கத்தினான்-

"யாரும் சயனைட் குப்பியைக் கடிக்காதேங்கோ... நாங்கள் இருக்கிறம் கரைக்கு போயிடலாம்..... யோசிக்காதேங்கோ."

அலைகளின் மோதலுக்கிடையில் அரை குறையாகக் கடிபட்ட அவளின் குப்பியைக் கடல் அடித்துக் கொண்டு போயிற்று.

ஆழ்கடலில் - கரை தெரியாத வெறும் நீர் வெளியில் பத்துப் பெண் புலிகள்.....

பழநி மூன்று பெண்களின் 'பொலித்தீன்' பைகளைப் பிடித்து இழுத்தபடி மெல்ல மெல்ல மன்னாரை நோக்கி நீந்தத் தொடங்கினான்...... போகும் போது அவன் கத்திக்கொண்டே போனான்:

"கெதியாய் வந்திடுவன்.... போட் (படகு) கொண்டு வருவன் பயமில்லாமல் இருங்கோ..."

பழநியோடும் ரகுவப்பாவோடும் இன்னும் இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். அவர்களும் படகு கொண்டு வரும் நோக்கில் கரை இருந்த திசையை நோக்கி விரைவாக நீந்தத் தொடங்கினார்கள்....

வசந்தி அவள் பாட்டில் தனியாக அவர்கள் பின்னால் நீந்திக்கொண்டே போனாள்...... முன்பே அவளுக்கு நீச்சல் தெரியும்.

அலைகளின் ஆவேசமான இரைச்சல்.... காற்று வேகமாக உறுமியது. 'சளாக்!' என்று அடிக்கடி பெரிய மீன்கள் பாயும் ஓசை.

எட்டு மணிநேரம் கடலோடு கொடுமையான போராட்டம்.

கவிழ்ந்த படகில் உட்கார்ந்திருந்த ரகுவப்பா வானத்தைப் பார்த்தான். கொடிய இருளின் பின்னணியில் வெளிச்சம் காட்டும் விண்மீன்கள்.

அப்போதுதான்-

அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்த படகை பழநி நடுக்கடலுக்குக் கொண்டு வந்தான்.

நீந்திக் கொண்டே இழுத்துச் சென்ற மூன்று பெண் புலிகளையும் கரையில் சேர்த்துவிட்டுப் பதட்டத்தோடும் - படகோடும் வந்திருந்தான்.

நல்லவேளை யாருக்கும் எதுவும் நடந்து விடவில்லை.

'பொலித்தீன்' பொதிகளோடு மிதந்தவர்கள் படகில் ஏற்றப்பட்டார்கள். அவர்களுக்கு நம்பிக்கையும் தெம்பும் ஊட்டிக் கொண்டிருந்த ரகுவப்பாவும் படகில் ஏறினான்.

எட்டு மணிநேரம் கடலலைகளோடு போராடியதால் அனைவரும் களைத்து விட்டனர். குப்பி கடித்த பெண் போராளி வாந்தி வாந்தியாக எடுத்தாள்....

ஆனால்......

அவள் உடல் நிலை ஆபத்தான நிலையிலில்லை.

காலை மூன்று மணி.

மன்னார்க் கரையில் வெள்ளை மணற் பரப்பில் ரகுவப்பா பழநியுட்பட பெண்புலிகள் அனைவரும் கரையை மிதித்தார்கள்.

தாய் மண்ணின் இனிய கடற்கரைக் காற்று சுகமாக வீசிற்று.

பழநி சயனைட் கடித்தவளைப் பார்த்துச் சொன்னான்:

"நான் சொல்லியும் நீ கேட்கவில்லை பார்.... சயனைட் முழுதாக உள்ளே போயிருந்தா உன்ரை நிலை என்ன ஆகியிருக்கும்....?



எல்லோரும் சிரித்தார்கள்.

பதட்டத்தில் 'சயனைட்' கடிக்க முனைந்ததை நினைத்து அவள் வெட்கப்பட்டாள்.

05.10.87 காலை

பருத்தித்துறையில் கைதான பதினேழு விடுதலைப் புலிகளும் பலாலி இந்தியப் படை முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

கொழும்புக்கு அவர்களைக் கொண்டு செல்வதென்பதில் ஜெயவர்த்தனாவின் முடிவு இறுக்கமாக இருந்தது.

மாவீரன் புலேந்திரன், சிங்கள இனவெறியர்களின் கண்ணில் மண்ணாய்த் தைத்தான். தமிழ் மண்ணான திருகோண மலையைப் பறிக்க முனைந்த சிங்களக் காடையர்களை ஓட ஓட விரட்டியவன் புலேந்திரன். எப்படியும் கொழும்புக்குக் கொண்டு போய் ஆசைதீர அவனைச் சித்திரவதை செய்து சாகடிக்க வேண்டும் என்று அவர்கள் துடித்தார்கள்.

விடுதலைப் புலிகள் பொதுமன்னிப்பளிக்கப்பட்டவர்கள் என்பதும், அவர்களைக் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு செல்வது உடன்படிக்கைக்கு முரணானது என்பதும் புலிகளின் நிலைப்பாடு.

பலாலியில் அடைபட்டிருந்த லெப். கேணல் குமரப்பாவும், புலேந்திரனும், மேஜர் அப்துல்லாவும் ஏனைய பதின்நான்கு புலிகளும் கொண்டிருந்த உறுதி வைர மானது.

"கொழும்பு கொண்டு சென்றால் நாங்கள் தற்கொலை செய்து கொள்வோம்" என்று அவர்கள் சிறிலங்கா அரசையும் - இந்திய அரசையும் எச்சரித்திருந்தார்கள்.

பலாலி முகாமில் ரகுவப்பாவும், பழநியும் நெஞ்சில் பழைய நினைவுகள் அலைபாய......

வசந்தி கண்முன் வருகிறாள்......

அன்று-

கடலில் தனியாக நீந்திக் கரை சேர்ந்த விடுதலைப்புலி வசந்தி, பின்பு ஒரு நாள் தன் துப்பாக்கி தவறாக வெடித்ததில் கழுத்தில் குண்டுபட்டு - உடலை அசைக்க முடியாதவளாக - இன்று படுத்த படுக்கையாக.....

கொழுத்த கடலலைகளை உதைத்துத் தள்ளி வசந்தி அன்று நீந்தியதை ரகுவப்பா நினைவுக்குக் கொண்டுவந்தான்...

காலக்காற்று எப்படியெல்லாம் மாறி மாறிச் சுழல்கின்றது.

எத்தனையோ புலிகளைக் கரையேற்றிய

ரகுவப்பாவும், பழநியும் கடலிலே கைதாகி இன்று பலாலி முகாமில் அடைபட்டுக் கிடக்கின்றார்கள்.

பதினேழு பேரில்-

திருமணமான புலிகள் மூவர் - குமரப்பா - புலேந்திரன் - ஹரன்...

குமரப்பாவுக்குப் போன திங்கள் தான் திருமணம் நடந்தது... மூன்று திங்களுக்கு முன்பு புலேந்திரனின் திருமணம்..... ஹரன் திருமணமாகி குழந்தைகளும் குடும்பமுமாய்...

பகல் 11 மணி ஆயிற்று.

பழநியின் மனதில் புலிகளை வழக்கமாகப் படகில் ஏற்றிக் கொண்டு புறப்படும்போது - அவர்களைப் பார்த்துக் கூறும் அந்தப் பழகிப் போன சொற்கள் நினைவுக்கு வந்தன:

"நாங்கள் இருக்கிறம் - பயப்படாதேங்கோ - அசையாதேங்கோ - என்ன நடந்தாலும் குப்பியைக் கடிச்சுப் போடாதேங்கோ..."

பழநி நினைவிலிருந்து முழுமையாக மீளவில்லை.....

அவர்கள் தங்கியிருந்த அறையின் கண்ணாடி யன்னல்கள் உடைந்து நொருங்கி விழும் கொடிய ஓசை காதைப் பிளந்தது. சிறிலங்காப் படைவெறியர்கள் 'திமு திமு' என்று உள்ளே துப்பாக்கிகளோடு பாய்ந்தார்கள்.

எதிர்பார்த்ததுதான்......

வெறுங்கைகளோடிருந்த புலிப்படை முரட்டுத்தனமான ஆயுத பாணிகளைப் புயலின் வீச்சில் மோதிற்று. எதிரிகள் கடுமையாக தாக்கப்பட்டார்கள்.

சாவதென்று முடிவு செய்து விட்ட வீரனின் வெறுங்கை சம்பளத்துக்கு படைவீரனாக இருப்பவனின் துப்பாக்கியை விட வலிமையானதே.

"குப்பியைக் கடியுங்கோடா...?" என்று கத்தினான் புலேந்தி.

நொடியில் - விடுதலைப் புலிகளின் பதினேழு உடல்கள் சிங்களப் படை வண்டியில் தூக்கி வீசப்பட்டன.

பன்னிரண்டு பிணங்களாக..... ரகுவப்பாவும் பழநியும் கூடத்தான்.

# 2ம் லெப். மாலதி - புதிய புறநானூற்றின் முதலாம் அத்தியாயம்!

கணவனிற்கு மனைவியும், மகனிற்கு தாயும் வீரத்திலகமிட்டு களம் அனுப்பிய காலம் அன்றையது.

ஆனால்—

ஆண்களிற்கு சமமாக பெண்களும் களம் புகுந்து சமராடும் காலம் இன்றையது.

புதிய புறநானூறு எழுதிடும் புலிகளின் காலம் இன்றையது.

அழகுப்பாவைகளாகவும், அடுப்பங்கரை அரசிகளாகவும் பெண்கள் அடங்கி. இல்லை..... அடக்கப்பட்டு வாழ்ந்த காலம் மாறி...

புலிகளாய், கடற்புலிகளாய், கரும்புலிகளாய், ஆண்களொடு பெண்களும் வீரம் படைத்திடும் பிரபாகரன் காலம் இது.

வளையல்களைக் கைகளில் ஏந்தி அழகுத் திருமேனிகளாய் வலம் வந்த பெண்களா?

இன்று—

வலுவான கரங்களில் ஆயுதங்களை ஏந்துகின்றனர் என உலகமே வியக்கின்றது.

ஆண்களும் பெண்களும் ஒன்றிணைந்து சம உரிமையுடன் புரிந்திடும் செயற்பாடுகளே சமூக மேம்பாட்டிற்கு காரணமாக அமைந்திடும் எனும் சித்தாந்தத்தை உள்ளடக்கிய தமிழீழ பெண்ணியம் உலகின் அனைத்து பெண்ணியங்களிலும் இருந்து வேறுபட்டது. தனித்துவமானது.

பொதுவாக உலக விடுதலைப் போராட்டங்கள் அனைத்திலும் பெண்கள் ஆண்களிற்கு சமமாக சமராடிடும் சந்தர்ப்பத்தினைப் பெற்றதில்லை. மாறாக ஆண்களின் துணைப் படையணிகளாகவே பெண்கள் அணிகள் திகழ்ந்து வந்துள்ளன. விடுதலை இயக்கங்களில் பெண்களின் பணி தாதிகளாகவும், மருத்துவச்சிகளாகவும் தான் இருந்தது. ஆனால் எமது போராட்டத்தில் பெண்கள் பங்கு மிகவும் வித்தியாசமானது. பெண்படையணிகள், ஆண்படையணிகளின் துணைப்படையணிகளாக அல்லாது ஆண்படையணிகளோடு சமமாக நின்று சமராடும் படையணிகளாகவே தலைவர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு புதியதோர் புறநானூறு படைக்கின்றன.

இப்பெண் புலிகள் படைத்திடும் புதிய புறநானூற்றிற்கு முதல் விதையாக வீழ்ந்த பெண் சிறுத்தைதான்.....

2ம் லெப். மாலதி.

விடுதலைக்கு விதையாக வீழ்ந்த வேங்கைகள் வரிசையில் இந்திய இராணுவ வெறியர்களிடமிருந்து தமிழீழத்தைக் காக்கும் போரில் சயனைட் அருந்தி தன்னுயிர் ஈந்த வீரமறத்தி.

தமிழீழத்தின் பல பாகங்களில் இருந்து முன்னேற முற்பட்ட இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்து புலிகள் அணிகளில் ஆண்களும் பெண்களும் சமர் புரிந்து கொண்டிருந்த நேரமது.

உலகின் நான்காவது வல்லரசு தியாகி திலீபனையும், மாவீரன் குமரப்பா புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளை பலியெடுத்தி தனது சுயரூபத்தைக் காட்டத்தொடங்கியதை அடுத்து மக்கள் அனைவரும் பீதியில் ஆழ்ந்திருந்த வேளையது.

எமது தலைவன் அஞ்சாது இறுதிவரை போராட சபதம் பூண்டிருந்த வேளையில்......

அவனது வழியில் வைரத்தை ஒத்த உறுதியுடன் அணிதிரண்டிருந்தனர் வேங்கைகள்.

ஒக்ரோபர் 10 அன்று இந்திய – புலிகள் போர் தொடங்கியது.

அன்றைய தினம் – புலிகளின் கோட்டையாகக் கருதப்பட்ட யாழ்குடாநாட்டைக் கைப்பற்ற இந்திய இராணுவம் முயன்று கொண்டிருந்தது.

சிங்கள இராணுவ வெறியர்களின் 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கை பாதிவழியில் கப்டன் மில்லரின் வீரமிகு கரும்புலித் தாக்குதலினால் முடிவுக்கு கொண்டவரப்பட்டு மூன்று திங்கள்கள் மட்டுமே நிரம்பியிருந்த வேளை....

அமைதி காக்க வந்த படையாகத் தன்னைப் பிரகடனப்படுத்திய இந்தியப் படையின் முகமூடி கிழிந்து கொண்டிருந்த வேளையில்....

யாழ்குடாநாட்டில்...

கோப்பாயில் கடும் சமர் மூளுகின்றது.

அச்சமரில் புதிய பரணி படைத்திட என்றுதித்த வீரத் தமிழ் மகள் மாலதி..... காயமடைகின்றாள்.

நாலாதிசைகளிலும் இந்தியப் படைகள் முன்னேறி வர..... தன்னைப் பற்றி சிறிதும் சிந்தியாது மற்றைய போராளிகளின் பாதுகாப்பைக் கருத்தில் எடுத்து..... தன்னைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட தோழி விஜியினை தன்னை விட்டுச் செல்லுமாறு கூறிவிட்டு – தன்னிலையற்ற சிந்தனையுடன் சயனைட் உட்கொண்டு தன்னை ஈழ விடுதலைக்காக ஆகுதியாக்கிக் கொள்கின்றாள்.

சயனைட் உட்கொண்டு வீரச்சாவைத் தழுவுவது என்பது புலிவீரர்களிற்கு புதிதானதொன்றல்ல. புலிகள் இயக்கம் போராளிகளை விடுதலைக்கு விலையாகக் கொடுத்தது அன்று மட்டும்தான் அல்ல.

ஆனால்—

ஒரு பெண் போராளியை விடுதலைக்கு விலையாகக் கொடுத்தது அன்றுதான்.

மாலதியின் வீரமரணமானது அவளிற்குப் பின் எழுந்த அனைத்து போராளிகளினதும் இதயத்தில் தேசிய விடுதலைக்கனல் கொழுந்து விட்டெரியக் காரணமாக அமைந்தது.

அவளது தியாகமானது ஆயிரமாயிரம் அங்கயற்கண்ணிகளையும், நளாயினிகளையும், அகிலாக்களையும், யாழினிகளையும் படைத்திடக் காரணமாயிற்று.

மாலதியின் வீரமரணமானது பெண்கள் படையணிகள் படைத்து வரும் சாதனைகளிற்கு அத்திவாரக் கல்லாகும்.

மாலதியின் உயிர்க்கொடை, பெண்கள் மத்தியில் புதிய கருத்தைவிதைக்கக் காரணமாக அமைந்தது.

அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அஞ்சியிருந்த பெண்கள் எழுச்சி கொண்டு போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ள மாலதியின் வீரமரணம் காரணமாகியது.

அதனால் தான் புதிய புறநானூற்றில் முதல் அத்தியாயத்தை எழுதிய புலி வீராங்கனை மாலதி வீரமரணமடைந்த நாள் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நாளிலேயே சமூகத்தில் முளைவிடும் பிற்போக்கு வாதங்கள் கருகிச் சாம்பலாகின்றன.

யானையை அடக்கிய அரியாத்தையையும், தமிழ் மண்சிதைக்கப் புகுந்த வெள்ளையரை ஓட ஓட விரட்டிய நல்லநாச்சியாரையும் நினைவுகூர்வதில் மட்டும் நின்று விடாது – எம்மண்ணை, எம்மக்களை அழித்திடத் துடிக்கும் சிங்கள வெறியர்களை அழித்தொழித்திட தமிழ்ப் பெண்கள் புலிகளாக மாறிடும் நாளிது! ✷

**-திரையன்.**





**விடியல் தேடி ஸ்கொட்லாந்திற்கு தமிழீழ மக்களின் புரட்சிப் பயணம்.**

**காலம்: 25–10–97 சனிக்கிழமை**
**நேரம்: காலை 7–00**

பயணம் ஆரம்பமாகும் இடம்: Kings Cross Station

ஒரு இருக்கைக்கான கட்டணம்: £30

மேற்கண்ட தினத்தில் 'தமிழீழ – ஸ்கொட்லாந்து நட்புறவு புகையிரதம்' எனும் தனிப்பட்ட வண்டியில் ஸ்கொட்லாண்ட் புறப்படும் தமிழ் மக்கள், அங்கு சென்று பொதுநலவாய அரசுகளினதும் ஸ்கொட்டிஸ் மக்களினதும் கவனத்திற்கு தமிழீழ மக்கள் மீது சிங்கள அரசு மேற்கொண்டு வரும் இனப்படுகொலை நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஸ்கொட்டிஸ் தேசத்துடன் நல்லுறவை வளர்க்கும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவர்.

மேலதிக தொடர்புகளிற்கு: தமிழ் தொடர்புசாதனப் பிரிவு, பொதுநலவாயம் – 97இற்கான தமிழர் பேரவை, C/O:

**UTO, Eelam House, 202 Long Lane,**
**London SE1 4QB**

தொ.பே.இல. – **0171-403 4554/ 0956 314 370**


# அபாயகரமான ...

போர் முயற்சிகளை மேற்கொள்வதில் இராணுவம் பங்கு கொள்வதாக உள்ளது. இவ்வாறான நடவடிக்கையானது முன்னைய அரசுகளின் நில ஆக்கிரமிப்பு முயற்சியில் இருந்து வேறுபாடானது அல்ல. எனினும், இதன் நோக்கங்களில் வேறு அம்சங்களும் உள்ளன. இதில் முன்னைய நில ஆக்கிரமிப்பு தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் முயற்சியாக இருந்த அதேவேளை, தற்போதைய நடவடிக்கையானது இன்று இடம் பெற்றுவரும் தமிழர் தாயக விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கான வழிமுறைகளில் ஒன்றாகக் கொள்ளலாம். ஏனெனில், இராணுவரீதியில் ஆக்கிரமிக்கப்படும் ஒரு பிரதேசத்தை நீண்ட காலத்திற்கு இராணுவத்தினால் பாதுகாப்பது என்பது கடினமான காரியம் மட்டுமல்ல பெரும் பொருட் செலவீனத்துடன் கூடிய ஒரு விடயமும் ஆகும். அதாவது, இராணுவம் நீண்டகால நோக்கில் இவ்விடயத்தில் தோற்கடிக்கப்படுவது தவிர்க்க முடியாத விடயமாக நிச்சயம் இருக்கும். இந்நிலையில்தான், இராணுவ ரீதியில் ஆக்கிரமிக்கப்படும் பிரதேசங்களில் குடியேற்றங்களை நிறுவுவதன் மூலம் இப்பகுதிகளை நிரந்தரமாக ஆக்கிரமிக்கவும் பாதுகாக்கவும் முடியும் என சிறீலங்கா இராணுவத்தலைமையும் சிங்கள அரசியல்வாதிகளும் கருதுகின்றனர். ஆனால், இது இவர்களின் கண்டுபிடிப்பல்ல. முது பெரும்அரசியல் தத்துவஞானிகளே எதிரியின் ஒரு பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்கான சிறந்த வழி என்று இதைக்கூறியுள்ளனர். ஏனெனில், இவ்வழிமுறையானது பல வழிகளில் நன்மைபயக்கக் கூடியதாகும். ஒருபுறம் இந்தப் பகுதி ஆக்கிரமிப்புக்குள்ளாக்கப்பட்ட பின்னர், மிகப் பூரணமான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். இதன்மூலம் அவ்விடத்திற்குரிய மக்கள் நடமாட்டங்கள் பூரணக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும். இரண்டாவதாக இவ்விடங்களில் குடியேற்றப்படுவோர் ஒரு நிரந்தர இராணுவமாக அரசுக்கு விசுவாசமானவராக எப்பொழுதுமே செயல்படுவார்கள். அத்தோடு ஆரம்பத்தில் அப்பகுதியில் நிலைநிறுத்தப்படும் இராணுவத்தினருக்கு தகவல் வழங்குபவர்களாக செயல்படுவார்கள். நீண்டகால நோக்கில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்புக்களை அவர்கள் தமது உடமை எனக் கருதத் தொடங்குவதோடு அம்மண்ணிலேயே தமது பொருளாதாரத்தை விருத்தி செய்துகொண்டு அம்மண்ணின் உரிமையாளருக்கு எதிராகச் செயல்படுபவர்களாகவும் இருப்பார்கள். இது ஆக்கிரமிப்பு அரசுக்கு செலவீடு இன்றி இராணுவத்தை அப்பகுதியில் 'நிலைநிறுத்தி வைப்பதற்கு ஒப்பானதாக, ஒருவகையில் அதைவிட உயர்வானதாகக்கூட இருக்கும். அதாவது, செலவீடு இன்றிப் பிரதேசத்தை தக்க வைத்துக் கொள்வதாகவும், செலவீட்டைக் குறைக்கவோ அன்றி செலவீட்டை வேறு தேவைக்குப் பயன்படுத்தவோ வாய்ப்பாகவும் இருக்கும். இந்த வகையில் இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவது என்பது, ஒரு பிரதேசத்தை இராணுவம் ஆக்கிரமிப்பது என்பதை விட உயர்ந்தளவு பாதிப்பை விளைவிக்கக் கூடியதாகும். ஆனால், இதனை மக்கள் குடியேற்ற நடவடிக்கை என்றோ, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை என்றோ அரசு காட்டமுனையலாம். ஆனால், இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக ஒருபோதும் இருக்கமாட்டாது. இது மிக அபாயகரமான அபகரிப்பு நடவடிக்கையாகக் கொள்ளப்படும். ✷

(நன்றி : ஈழநாதம்)

# தீருவில் தீயில் தியாக தீபங்கள்

**பலாலியில் பலியாகி தீருவில்வெளியில் தீயுடன் கலந்து விட்ட பன்னிரு வேங்கைகளின் பத்தாவது ஆண்டை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப் படுகின்றது.**

தமிழீழ போராட்டத்தின் மூத்த தளபதிகளும் போராளிகளும் இந்திய – இலங்கை அரசுகளின் கூட்டுச்சதியால் கைதாகி கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது எதிரியின் கபட நாடகத்தை அம்பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தில், கொல்லும் சயனைட் வில்லையை மகிழ்வுடன் உண்டு தம் உடல்களை தாயக மண்ணிற்காக உரமாக்கினார்கள்.

இரு தளபதிகளும் மணமாகி மணமாலை வாடு முன்பு தாய், தாரம் இரண்டையும் விட உயிரிலும் மேலான தாயக விடுதலையையும் மக்களையும் நேசித்த வர்கள். இந்நிகழ்வு தமிழீழப் போராட்டத்தின் முக்கியமான திருப்புமுனையாகும். அத்துடன் தமிழீழ போராட்டத் திற்கு உத்வேகம் அளித்து புத்துயிர் பெறச்செய்தது.

29–07–87 மாலை 6.15 மணிக்கு தமிழீழ தேசத்திற்கு இந்திய இராணுவத்தை ஏற்றி வந்த முதல் விமானம் தரையிறக்கப்பட்டது.

5–10–87 பிற்பகல் 5.05 மணிக்கு பலாலி இராணுவ முகாமில் புலேந்திரன், குமரப்பா, அப்துல்லா, மிரேஷ், நளன், அன்பழகன், ஆனந்தக்குமார், றெஜினோல்ட், பழனி, கரன், தவக்குமார், ரகு, தமீம், கருணா, கரன், தாஸ், செல்வா, சிவகுமார் ஆகிய 17 போராளிகள் சயனைற் உட்கொண்டனர். இவர்களில் முதல் 11 பேரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். ரகு ஆபத்தான நிலையில் இருந்து அடுத்த நாள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டான். வீரச்சாவைத் தழுவிக்கொண்ட புலேந்திரன் மணமுடித்து இரு மாதங்கள்தான் – குமரப்பா மணமுடித்து ஒரு மாதம் – கரன் இரு குழந்தைகளின் தந்தை. உயிர் பிழைத்த ஏனைய ஐவரும் நீண்டகால சித்திரவதையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

03–10–87 அன்று எமது கடற்பரப்பில் இப் பதினேழு போராளிகளும் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தமிழகத்திலிருந்து எமது அலுவலக ஆவணங்களை படகில் ஏற்றி வரும் போதே கைதாகினர். கைதான வர்களில் ஒருவர் புலேந்திரன் என்று தெரிந்ததும், சிறிலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலக் முதலி துள்ளிக் குதித்தார். சிறிலங்கா வானொலி புலேந்திரனுக்கு கொலைகாரப் பட்டம் சுமத்தி, இவ்வாறான ஒரு பயங்கர குற்றவாளியை கைது செய்துள்ளோம் என பெருமை பேசியது 'இவர்கள் ஆயுதங்களுடன் காணப்பட்டதாலேயே இவர்களைக் கைது செய்ய வேண்டியேற்பட்டது' என்று நியாயமும் கூறியது.

இவர்கள் பலாலி இராணுவ முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்டது பற்றி, தலைவர் பிரபாகரன் இந்திய அரசிடம் தமது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்தார். இது பற்றி 05–10–1987 அன்று தமிழீழத்தில் வெளிவந்த ஈழமுரசு செய்தி இதழில் பின்வருமாறு தலைவர் தெரிவித்ததாக வெளியிடப்பட்டிருந்தது. "ஆயுதங்களை கையளித்த பின் எமக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டதாக பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட போராளிகளைக் கைது செய்வதும், தடுத்து வைப்பதும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணானதாகும்.

எமது போராளிகள் இதுவரை எதுவித குற்றமும் இழைக்கவில்லை. குற்றமிழைக்காதவர்களை கைது செய்ய முடியுமா?

ஒரு மீனவத் தொழிலாளி தனது தொழிலைச் செய்ய கடலில் செல்ல உரிமையைப் போன்றதான செயலைத்தவிர எமது போராளிகள் வேறு எதனைச் செய்தார்கள்?

நமது பிரதேசத்துக் கடலில் நாம் சுதந்திரமாகச் செல்லக் கூடாதா? எமது இந்தச் சுதந்திரம் பறிக்கப்படக்கூடிய ஒன்று என நாம் கருதவில்லை. வெளிநாடு செல்ல விமானத்தில் பறப்பது போன்றே கடலில் படகில் செல்வதற்கான உரிமையும் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

இது போன்றதே நடந்த சம்பவமாகும். இந்தியாவில் உள்ள எமது தலைமைக் காரியாலயத்தை மூடிவிட்டு அங்கிருந்த தஸ்தாவேஜுகளையும் பிற ஆவணங்களையும் எடுத்து நம் பிரதேசத்துக்கு கொண்டுவர இந்திய கடற்படையிடம் பாதுகாப்பும், அனுமதியும் கேட்டோம். பலதடவை கேட்டோம். ஆனால் தரப்படவில்லை. எனினும் பொருட்களை எடுத்து வருவது பற்றி இந்திய அரசுக்கு அறிவித்திருந்தோம்.



இந்நிலையில் பொருட்களை இந்தியக் கரையில் எடுத்து வைத்து விட்டு பின் அவைகளில் ஒரு பகுதியை வள்ளத்தில் கொண்டு வந்து நமது பிரதேசத்தில் இறக்கிவிட்டு மீண்டும் மீதிப் பொருட்களை எடுத்து வர வள்ளத்தில் சென்றபோதே கைது சம்பவம் இடம்பெற்றது.

தளபதிகள் தற்பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கி வைத்திருக்க அனுமதிக்கப்பட்டது. இதனையே தளபதிகள் இருவரும் கொண்டு வந்தனர். ஆனால் சிறிலங்கா அரசின் வானொலி, தொலைதொடர்புச் சாதனங்கள், ஆயுதங்களைக் கொண்டு வந்ததாகப் பிரச்சாரம் செய்கின்றன.

ஆயுதங்களை ஒப்படைத்த பின் எமது பாதுகாப்புக்களை இந்தியப்படையிடம் ஒப்படைத்தோம். எம்மை யாராவது கைது செய்வதை தடுக்கவேண்டியவர்கள் அவர்களே. எமக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியவர்களும் அவர்களே.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா எம்மை அங்கீகரித்தது. இவ்வாறு நிலைமை இருக்கும் போது சிறிலங்கா அரசு எம்மைக் கைது செய்யும் கட்டத்தில் இந்தியாவே எம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய கடமைப்பாட்டுக்குரியது. தவறின் அது ஆபத்துக்குரியதாகும்."

தலைவர் அவர்களது வேண்டுகோளானது அலட்சியம் செய்யப்பட்டது. கைதானவர்களை கொழும்புக்கு கொண்டு செல்வது பற்றி இரு அரசுகளும் ஆராய்ந்தன.

இந்நிலையில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு தலைவர் அவர்களால் ஒரு செய்தி அனுப்பப்பட்டது.

இச்செய்தியை இலங்கைக்கான இந்திய தூதுவரான டிக்ஷிற்றுடன் ஆலோசித்த ராஜீவ், பின்னர் டிக்ஷிற் ஊடாக சில நிபந்தனைகளை உள்ளடக்கிய தனது செய்தியை அறிவித்தார். அச்செய்தியில், "புலிகளுடனான போரில் கைதாகி, புலிகளின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட வேண்டும். ஜே.ஆர் விரும்பியவாறு இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்" எனும் நிபந்தனைகள் உட்பட்ட வேறு சில நிபந்தனைகளும் அடங்கியிருந்தன.

இவ் நியாயமற்ற நிபந்தனைகளை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உறுதித் தன்மையை உலகிற்கு எடுத்தியம்பியது.

*"இது பேரங்களுக்கு மசியாது, எனவே இதை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இல்லையேல் இந்தியாவின் பிராந்திய நலனைப் பேணமுடியாது!"*

என்ற முடிவுக்கு வந்தது இந்திய அரசு. அதன் முதற்கட்ட பலியாக கைதான 17 விடுதலைப் புலிகளையும் தேர்ந்தெடுத்தது.

"தளபதிகள் இருவரும் அண்மையிலேயே திருமணமானவர்கள். எனவே வாழ்வில் பற்றுக் கொண்டிருப்பார்கள். இவர்களிடம் இந்திய பிரதமரின் நிபந்தனைகளைக் கூறுவோம். இவர்கள் கைதிகளை விடுவிப்பதற்கு சம்மதித்தால், அதனைப் பிரச்சாரப்படுத்துவோம்" எனக் கருதிய இந்திய இராணுவத்தினர் முதலில் புலேந்திரனை அணுகினர். பிரதமர் ரஜீவின் நிபந்தனைகளை தெரிவித்தனர்.

அதற்கு புலேந்திரன், "சிறிலங்கா இராணுவத்தினர் எம்மோடு யுத்தத்தில் ஈடுபட்ட வேளையில் யுத்தக் கைதிகளாகக் கைது செய்யப்பட்டவர்கள். நாம் சமாதான ஒப்பந்தத்தின் பின் கைது செய்யப்பட்டவர்கள். எனவே இவ்விரண்டையும் ஒப்பிட முடியாது. தமிழீழ இலட்சியத்திற்காகப் போராடும் எம்மை வைத்து இடைக்கால நிர்வாக சபை குறித்துப் பேரம் பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது" என திட்டவட்டமாகத் தெரிவித்தார்–(ஈழமுரசு 06.10.1987).

இந்திய – சிறிலங்கா அரசுகள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டன.

**05.10.1987.**

அன்று மிக விரைவாகச் சம்பவங்கள் நடந்தன. தென்பிராந்தியத் தளபதி திபேந்தர் சிங் பின்பு இந்திய தூதர் டிக்ஷிற் சிறிலங்கா ஜனாதிபதியுடன் பேசுவதாகவும், விரைவில் சுமுகமான முடிவு வரும் என்றும் தெரிவித்தார்.

புலேந்திரன் தலைவருக்காக தனது இறுதிக் கடிதத்தை வரைந்தார். அதே போல் குமரப்பாவும் தனது இறுதிக் கடிதத்தை எழுதினார். ஏனைய போராளிகளும் கூட்டாக தமது இறுதிக் கடிதத்தை வரைந்தனர்.

மூன்று கடிதங்களினதும் சராம்சமும் ஒன்றுதான். தம்மைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்றால் தம்மைத் தாமே அழித்துக 'கொள்ளப் போவதாக அறிவித்திருந்தனர்.

விடுதலைக்கான காலக்கெடு 7–00 மணியிலிருந்து 10–00 மணியாகியது. பின்பு பிற்பகல் 2–00 மணியாகியது. ஆயினும் 2–00 மணி கடந்த பின்பும் பன்னிரு வேங்கைகளும் விடுதலை செய்யப்படவில்லை.

தலைவர் குறிப்பிட்டது போல் சிங்கள இனவாதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கும் நேரம் நெருங்கியது. பிற்பகல் 5–05 மணிக்கு நாம் அவர்களை இழந்தோம். வீரச்சாவெய்தும் இறுதி மணித்துளிவரை அவர்கள் போராடினார்கள்.

சயனைற் உட்கொண்டவர்கள், உயிர் பிரிந்த பின்னர் கூடத் தாக்கப்பட்டார்கள். புலேந்திரன் உடலில் தெரிந்த காயங்கள் இன்னொரு 'வெலிக்கடையை' ஞாபகப்படுத்தியது. காயத்துடன் காணப்பட்ட சடலங்களில் ரகுவினுடையதும் ஒன்று.

வல்வை – தீருவில், 07–10–87 அன்று பன்னிரு வேங்கைகளினதும் புகழுடல்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. இவர்களுக்கு ஆயுத பாணியாக வந்து அஞ்சலி செலுத்தினார் தலைவர் அவர்கள்.

ஒப்பந்தம் உருவாகிய சில நாட்களில் தமிழகத்தைச் சேர்ந்த திரு.பழ. நெடுமாறன் அவர்களிடம் "இந்நிலையில், தமிழீழ கோரிக்கை பற்றி ஈழத்தமிழ் மக்களின் கருத்தென்ன?" என்று கேட்டனர் பத்திரிகையாளர்கள். அதற்கு அவர், "அது அணைந்துவிடவில்லை – நீறு பூத்த நெருப்பாக இருக்கின்றது் அது எப்போதும் பற்றிக் கொள்ளலாம்" என்றார்.

*ஆம், நீறு பறந்தது! நெருப்பு பற்றிக் கொண்டது.*

தமது பிள்ளைகளுக்கான இறுதிக் கடன்களைச் செய்வதற்காக நாற்காலிகளில் வரிசையாக இருத்தப்பட்ட பன்னிரு வேங்கைகளினதும் பெற்றோர்களைப் பார்க்கையில் எமது மக்களின் வயிற்றில் பற்றியெரிந்த நெருப்பு – நான்கு அடி உயரமான சிதையில் பன்னிரண்டு மாவீரர்களையும் வரிசையாக அடுக்கி வைத்து மூட்டிய பெரு நெருப்பு – திரு.நெடுமாறனின் கூற்றை நிரூபித்தது. ❑

★ ★ ★ ★ ★

**நன்றி: "தீருவில் தீ"**

**வெளியீடு மாவீரர் பணிமனை 1992**

தீயினில் எரியாத
தீபங்களே!
எம் தேசத்தில்
நிலையான வேதங்களே !

# விடுதலைப் புலிகளின் போராட்ட

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண் புலியாக வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 2ம் லெப். மாலதியின் 10 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு 'சுதந்திரப்பறவைகள்' செய்தித்தாளில் (1993 இல்) பிரசுரமான கட்டுரையை இங்கு மீள்பிரசுரம் செய்கின்றோம்.

**1985**ஆம் ஆண்டின் முற்பகுதி, மலைப்பிரதேசத்தில் அமைந்திருந்த ஒரு பயிற்சி முகாமில், எமது பாசறைக்கு முன்பாக, ஒரு பாறாங்கல்லில் இருந்து 'போர்க்குரல் –1', படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு முன்பாகச் சிறிது தூரத்தில் அருவி ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. திடீரென அந்த அருவி ஓடுகின்ற ஓசையோடு சேர்ந்துகலகல என்ற சிரிப்பொலியும், கதைக்கின்ற சத்தமும் கேட்டது. அத் திசையை நோக்கினேன். ஏறத்தாழ பதினைந்து, இருபது பெண்கள் வண்ண வண்ணச் சட்டைகளுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

முன்னுக்கு வந்தவள், நீல நிறத்தில் புள்ளிகள் போட்டிருந்த சட்டையுடன், இரட்டைப் பின்னலுடன், எட்டி எட்டிக் கால்களை வைத்து, வேகமாகவும் மிடுக்காகவும் நடந்து வந்து கொண்டிருந்தாள். என்னருகில் வந்ததும் என்னை ஒரு மாதிரி மிடுக்காகப் பார்த்தாள். பின் எல்லோரும் பாசறைக்குள் நடந்து சென்றார்கள். நான் நினைத்துக் கொண்டேன், 'எங்களைப்போல பயிற்சி எடுக்கத்தானே வந்தார்கள். பயிற்சியின்போது உந்த மிடுக்கு எங்கே போகுதோ தெரியாது.'

இரண்டு நாள் கழித்து நான் என்னுடைய அறையில் நின்றிருந்தேன். நீலநிறச் சட்டை அணிந்தவள் வந்து என்னைப் பார்த்துக் கேட்டாள்,

"அக்கா, விளக்குமாறா வைத்திருக்கிறியள்?" என்று. நான் உடனே பெரிதாகச் சிரித்துவிட்டு "இல்லை, இல்லை எங்களிடம் விளக்குமாறுதான் இருக்கின்றது" என்றேன்.

பின் இவளிடம் இடம், பெயர், ஊர் எல்லாவற்றையும் கேட்டேன். முழுப்பெயர் சகாயசீலி, வீட்டுப்பெயர் சகாயம் என்றாள். பின் நான் சொன்னேன், "நீங்கள் சொந்தப் பெயரை இனிமேல் யாருக்கும் சொல்ல வேண்டாம். ஏதாவது பொய்ப் பெயரைச் சொல்லுங்கள்" என்றேன்.

இவள் கதைக்கும் தமிழுக்கும் நான் கதைக்கும் தமிழுக்கும் நிறையவே வித்தியாசம் இருந்தது. இதனால்தான் "விளக்கமாறு வைத்திருக்கின்றீர்களா?' எனக் கேட்பதற்குப் பதிலாக, 'விளக்குமாறா வைத்திருக்கிறீர்கள்' என்று கேட்டாள்.

பின்னர் இவளைக் காணும்போதெல்லாம், "விளக்குமாறா வைத்திருக்கிறியள்" "பேனையா வைத்திருக்கிறியள்" என்று மற்றவர்களுக்குச் சொல்வது மாதிரிப் பகிடிவிட்டுச் சிரிப்பேன்.

நாங்கள்தான் முதல் முதலில் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளாகப் பயிற்சிக்குச் சென்றிருந்தோம். வெவ்வேறு பட்ட சமூகத்தில் இருந்து எல்லாரும் வந்திருந்ததால் எங்களுக்குள், மொழி உச்சரிப்பில் வேறுபாடு, ஊர் வேறுபாடு, மாவட்ட வேறுபாடு இருந்தது. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பார்கள். ஆனால் எங்களுக்கு இந்தப் பழமொழி மாறிவிட்டது. எங்களுடைய பழக்கங்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு வரும்வரை மட்டுந்தான் இருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பில் பயிற்சி எடுத்து முடித்த பின்னர் எங்களுடைய பண்பாட்டுக் கோலங்கள், பழமைவாதங்கள், வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள் எல்லாமே ஆணிவேறாக அக்குவேறாகச் சிதைந்து விட்டன.

அவளின் தமிழைப் பகிடி பண்ணியதால், இவள் ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளரிடம் என்னைப் பற்றி முறையிட்டாள். என்னையும் இவளையும் விசாரித்த பொறுப்பாளர், அவள் முன்னிலையில் அவளை எண்ணும்படி கூறி, என்னைத் தோப்படிக்க விட்டார். அவர் சென்றபின் நான் தோப்படிக்க, இவள் எண்ணிக்கொண்டு நின்றாள். தோப்படித்துக் தொண்டிருக்கும் போது இடையில், எண்ணுவதை நிறுத்திவிட்டு, "இனி நீங்கள் அடிக்க வேண்டாம். நான் அடிக்கின்றேன்" என்றாள். "இல்லை. எனக்குத் தந்த தண்டனையை நானே செய்து முடிக்கின்றேன்" என்றேன். அவள் என்னைப் பிடித்து நிற்பாட்டும்படி கெஞ்சிக் கேட்டும், நான் கோபமாக ஏசிவிட்டு நானே தண்டனையைச் செய்து முடித்தேன்.

இரண்டு நாட்களாக நான் தாண்டித் தாண்டி நடந்து கொண்டிருந்தேன். அப்போதெல்லாம் இவள் என்னைக் கண்கலங்கப் பார்ப்பாள்.

ஒரு ஞாயிறு காலை, எமது காலை உணவைப் பெறுவதற்காக நான் வரிசையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது இவள் என் பின்னால் நின்று கொண்டிருந்தாள். நான் சாப்பாட்டைப் பெற்றுக் கொண்டு, எங்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையான மரக்குற்றியில் அமர்ந்தபோது, இவளும் என்னருகில் வந்து இருந்தாள். பின் என்னுடன் சரளமாகக் கதைத்தாள். தான் எனக்குத் தண்டனை வாங்கித் தந்ததையிட்டுக் கவலைப்படுவதாகக் கூறினாள். இவளின் இரக்கமான உணர்வுகளைப் புரிந்து கொண்ட நான், "பிரச்சினையில்லை. நாங்கள் நல்லவர்களாக வளர்வதற்காகத்தானே இந்தத் தண்டனைகள்" என்றேன்.

## நோவுதா மணி? இனி அடிக்கமாட்டன்.

மன்னாரில் பரந்த வயல்வெளிகளைக் கொண்ட ஆட்காட்டிவெளியில், பேதுறு சகாயசீலி என்னும் பெயரோடு, துடிப்பாக விளையாட்டுக்களிலும், படிப்பிலும் திறமையாகத் திகழ்ந்தவள், எமது பயிற்சிப் பாசறையில் மாலதி என்னும் பெயரோடு துடிதுடிப்பான சுறுசுறுப்பான போராளியாக வீறுநடைபோட்டுக் கொண்டிருந்தாள்.

பயிற்சிப் பாசறையில், நானும் மாலதியும் நல்ல தோழிகளாக இருந்தோம். இருவரும் சண்டை பிடிக்காத நாளே இல்லை என்றுதான் சொல்லலாம். ஆனால், அடுத்த நிமிடமே சமாதானமாகி விடுவோம். ஏதாவது, நான் இவளுக்குப் பிடிக்காத மாதிரிச் சொன்னால், உடனே என்மேல் அடிதான் முதல் விடும். பின்னர் தான் என்னுடன் கதைப்பாள். சிறிது நேரத்தில் அடித்த இடத்தைத் தொட்டுப் பார்த்து, "நோவுதா மணி? இனி அடிக்கமாட்டன் மணி" என்பாள். எப்போதுமே இவள் யாருடனும் அன்பாகக் கதைக்கும்போது 'மணி' என்ற சொல்லையே பாவிப்பாள்.

இவளுடைய இந்தப் பாசையை நாளடைவில் நானும் பழகிக் கொண்டேன். இப்போதுகூட இவள் பாவிக்கும் 'மணி' என்னும் சொல் என்னுடைய பேச்சுவழக்கிலும் வருவது உண்டு.

பாசறையில் எல்லாவிதமான பயிற்சிகளையும் மாலதி சிரமமின்றிச் செய்து முடித்தாள். இவள் எந்தப் பயிற்சியையுமே சிரமம் என்று கூறியதுமில்லை – செய்ய முடியாது எனக் கூறியதும் இல்லை. நாங்கள் எமது பாசறைக்குப் பத்துப் பதினைந்து கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து உணவுப் பொருட்களைத் தூக்கி வருவோம். இவ்வேளையில், யாராவது கூடிய பாரமான பொருட்களைத் தூக்கி வந்தால், இவள் தான் கொண்டு வந்ததை மற்றவளிடம் கொடுத்துவிட்டு, மாறித் தூக்கி வருவாள். இவள் தன் பொருட்களை எல்லாருக்கும் முதல் பாசறைக்கு கொண்டு வந்து சேர்த்துவிடுவாள். இவள் என்னிடம் கேட்பாள், "வா மணி. திரும்பிப் பொருட்களைத் தூக்குமிடம் செல்வோம்" என்று. "இப்பத்தானே வந்தோம்? ஏன் திரும்பிப் போகவேண்டும்?" என்று கேட்டால், "பாவமடி, யார் ஏலாமல் வைச்சு வைச்சுத் தூக்குதுகளோ தெரியாது. வா, மணி போவம். இடைக்கிடை நாங்கள்




**2 ம் லெப். மாலதி**
**(பேதுறு சகாயசீலி)**
**(ஆட்காட்டிவெளி, மன்னார்)**
**பிறப்பு : 1967 - 01 - 04**
**வீரச்சாவு : 1987 - 10 -10**

தூக்கிக் கொடுப்போம்." என்று என்னை கூட்டிச் செல்வாள்.

## அநியாயப்படுவார் செய்கின்ற வேலைகள்

மாலதியிடம் சரியான முரட்டுத்தனமும், சரியான இரக்கமான குணமும் ஒருங்கே அமைந்திருந்தன. தன்னிடம் இருப்பதை இல்லாதவர்களுக்குக் கொடுப்பதிலும், தானாகச் சென்று உதவிகள் செய்வதிலும் மாலதி என்றுமே பின் நின்றதே இல்லை.

பயிற்சி முடிந்ததும் நாங்கள் மன்னாருக்கு வந்தோம். மன்னாருக்கு வந்ததும் இவள் 'கொலரை' இழுத்துவிட்டுச் சொன்னாள், "எப்படியடி? நீங்கள் முதல் முதல் தமிழீழத்தில் என்ரை மாவட்டத்திலைதான் பெண் போராளிகளாகக் காலடி எடுத்து வைத்திருக்கின்றீர்கள்" என்றாள்.

பின்னர் நாங்கள் மோட்டார் சைக்கிள் ஓடப் பழகினோம். அங்கே, இங்கே என்றெல்லாம் விழுந்தெழும்பிப் பழகினோம். இவள் முதலில் பழகிவிட்டாள். "பின்னால் ஏறு. நான் ஓடுறன்" என்பாள். எங்காவது மோதப்போவது தெரிந்தால், தான் பாய்ந்து ஓடிவிடுவாள். நாங்கள்தான் விழுந்து மூக்குடைவோம். விழுந்து கிடப்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு நிற்பாள். "நில்லடி வாறன்" என்று தடி எடுத்துக் கொண்டு ஓடினால் "மணி, மணி" என்று சாலம் பண்ணிச் சமாளித்துவிடுவாள்.

ஒருநாள் என்னையும் இவளையும் தேங்காய் எடுத்து வரும்படி முகாம் பொறுப்பாளர் வெளியில் அனுப்பினார். இவள்தான் மோட்டார் சைக்கிள் ஓடிவந்தாள். வரும் வழியில், "மாந்தையில் எங்கடை பெட்டைகள் 'கட்அவுட்' நிற்கிறார்கள். அங்கே போட்டுவந்து தேங்காயை எடுத்துப்போவம்" என்றாள். "இல்லையடி. நேரம் போனால் பொறுப்பாளர் தண்டனை தருவர். வேண்டாம்" என்றேன். "இல்லையடி, நீ வா. நான் எல்லாம் சமாளிக்கிறேன்" என்றாள். சரி என்று மாந்தைக்குச் சென்று, திரும்பி, தேங்காய் எடுத்து வந்தோம். நேரம் போனதாக கண்மண் தெரியாமல் ஓடிவந்தாள். இடையில் ஒரு மரத்துடன் மோதி இருவரும் விழுந்துவிட்டோம். இரண்டு பேருக்கும் காயம். எனக்கு உதடு உடைந்துவிட்டது. அவளுக்கு முழங்காலிலும், முழங்கையிலும் காயம். எனது இரத்தத்தைத் துடைத்துவிட்டு, "மணி, மோட்டார் சைக்கிளாலை விழுந்தது என்று பேசில யாருக்கும் சொல்லாதை" என்றாள். "ஏன்?" என்றேன். "எல்லாரும் பகிடி பண்ணுவாளுகள்" என்றாள்.

"அப்ப காயத்திற்கு என்ன சொல்வது?" என்றேன். "உனக்குத் தடி குத்திவிட்டது என்று கூறுகிறேன். எனது காயத்தை யாருக்கும் காட்டமாட்டேன்" என்றாள். அதேமாதிரி மடித்திருந்த சேட் கையை இழுத்து மூடிவிட்டாள். முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே இதேமாதிரியே கூறினாள். இருவரும் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை யாருக்கும் சொல்லவில்லை. ஒருநாள் எனக்கு எதற்கோ அடித்துவிட்டாள். இருவருமே துரத்துப்பட்டுச் சண்டை செய்ய, பொறுப்பாளர் வந்து விலக்குப் பிடித்துவிட்டு, இருவருக்கும் தண்டனை தந்து, "உங்கள் இரண்டு பேரையும் மேய்க்க எனக்கு பிறம்பாக ஒருநாள் வேணும்" எனக்கூறி, "போங்கோ" என்றுவிட்டார். மாலதி அடித்த கோபத்தில் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை எமது பொறுப்பாளரிடம் கூறிவிட்டேன். "சொல்லிப் போட்டாய். இஞ்சால வா. உனக்கு நல்லாத் தாறன்." என்றாள். இவள் நினைத்ததைச் செய்தே முடிப்பாள். இதனால் அவளின் மோட்டடிக்குப் பயந்து, பொறுப்பாளருக்குப் பின்னாலேயே திரிந்தேன். அன்றிரவு நித்திரையில் வைத்து, 'நம்பிக்கைத் துரோகி' எனக்கூறி, எனக்கு அடித்துவிட்டாள். நான் நல்ல நித்திரையில் இருந்ததால் திருப்பி அடிக்காமலேயே படுத்துவிட்டேன்.

ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளர் எமக்குப் புதிய 'சயனைட்'கள் தருவதற்காகச் சயனைட்டைக் கறுப்பு நூலால் கட்டிக் கொண்டிருந்தார். நானும் மாலதியும் பொறுப்பாளருக்கு அருகில் இருந்தோம். "நாங்களும் நூல் கட்டுறம். தாங்கோ." என்றோம். பொறுப்பாளர், "இரண்டு பேரும் ஓரிடத்தில் வந்தால் நன்மை நடக்காது. அநியாயம்தான் நடக்கும். இரண்டு பேரும் சும்மா

# வரலாற்றில் முதல் பெண்புலி

ருங்கோ" என்றார். கெஞ்சிக் கேட்டதால் னக்குச் சயனைட்டில் கறுப்பு நூல் கட்ட னுமதி கிடைத்தது. நான் சயனைட் ழுத்தில் நூலைப் போட்டு இறுக்கிக் காண்டிருந்தபோது, இவள், "இறுக்கா ட்டால் கழண்டுவிடும். நல்லா இருக்கு" ன்றாள். நான் இறுக்கியபோது, "இன்னும் றுக்கி இழு மணி. இறுக்கி இழு மணி." ன எனக்கு உற்சாகமூட்டியதால், நான் லமாக இழுத்தபோது, சயனைட் ழுத்தோடு உடைந்துவிட்டது. எனக்குத் ரள் பறந்ததால் சாதுவான மயக்கம் ற்பட்டது. அவள் உடைந்ததை எடுத்து ணைந்தபோது, அவளும் சாதுவான யக்கமுற்றாள். பொறுப்பாளர் ஏசினார். அநியாயப்படுவார் செய்கிற வேலைகள் ன்றா, இரண்டா......?"

## கோட்டையிலும் தொலைத்தொடர்பு நிலையத்திலும்

87இல் மன்னாரைவிட்டு யாழ்ப்பாணம் ந்தோம். யாழ்ப்பாணத்தில் கோட்டையைச் ற்றிக் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். க் காலப்பகுதியில் பீச் றோட் பக்கமாகக் ாவற்கடமையில் நின்றோம். ஒருநாள் ங்கள் வேறுபகுதியில் கண்ணிகள் வைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். ாலதி மட்டுமே காவல் கடமையில் ன்றாள். அப்போது எதிர்பாராதவிதமாகக் காட்டையில் இருந்து இராணுவத்தினர் ன்னேறி மாலதியின் காவல் நிலைக்கு ன்னால் வந்துவிட்டனர். மாலதி சிறிது நரம் தனித்து நின்றே இராணுவத் னருக்கு எதிராக ரவைகளைப் பொழிந்து ள்ளினாள். சிறிது நேரத்தில் மேஜர் சாதியாக்காவும், எமது பொறுப்பாளர்களும் சென்று சண்டை செய்தனர். மூன்று, ான்கு பேர் மட்டுமே சண்டை செய்வதைக் கண்ட இராணுவத்தினர் மேலும் முன்னேற முயற்சி செய்தனர். இவ்வேளையில், மேஜர் சோதியாக்காவின் நப்பி உடைந்து, அவர் மயக்கம் அடைந்ததால் அவரை இருவர் தூக்கிச் சென்றனர். மாலதி தனித்து நின்றே சுட்டுக் கொண்டு நின்றாள். மேஜர் சோதியாக்காவைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்றதும், மாலதி ஓடிச்சென்று நாம் ஏற்கெனவே புதைத்து வைத்திருந்த 'பன்றிக்குட்டி' எனும் மைன்ஸை வெடிக்கச் செய்துவிட்டாள்.

பெரியதொரு வெடிஓசையினால் அதிர்ச்சி அடைந்த இராணுவத்தினர் பயத்தின் பீதியால் பின்வாங்கி கோட்டைக்குச் சென்றுவிட்டனர். பின்னர், "மாலதி ஏன் பன்றிக்குட்டியை அமத்தினாய்" எனக் கேட்கப்பட்டபோது, "ஆமியை எதிர்த்துத் தாக்குதவற்கு எமது ஆட்கள் நிறையப் பேர் இல்லை என்பதை அவன் தெரிந்துவிட்டான். இதனால் விரைவாக முன்னேறினான். எங்கடையாட்கள் வருவதற்கிடையில் ஆமி எங்களுடைய நிலைகளுக்கு முன்னேறிவிடுவான் என்றதினால் அவனை பின்வாங்கச் செய்யவே எங்கோயோ கிடந்த மைன்ஸை அமத்திவிட்டேன்" என்றாள்.

மாலதி திடீரென இப்படி ஓர் மாற்று நடவடிக்கையைச் செய்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம். மாலதி எவ்வளவுதான் விளையாட்டுத்தனம் செய்தாலும் அவளுக்குள் வீரமும் அஞ்சாமையும் நிறைந்து காணப்பட்டது. கோட்டையில் இருந்து ஷெல்லடி அடி தொடங்கியதும் வெளிக்கிடப் போறான் என்ற ஊகம் எங்களுக்கு இருக்கும். உடனே நாங்கள் இராணுவத்தை எதிர்ப்பதற்கு, எங்களுக்கென ஒதுக்கப்பட்ட காவல் நிலைகளுக்கு விரைந்து செல்வோம்.

இந்த விரைவு வேளைகளில் மாலதியே தனது நிலைக்கு முதலில் சென்றுவிடுவாள். நாமெல்லாம் செல்லடிக்கு நிலை எடுத்து, நிலை எடுத்துச் செல்வோம். மாலதியோ அப்பிடியில்லை. முகாமில் இருந்து ஓடத்தொடங்கினால் தனது காவல்நிலையை அடைந்ததும்தான் திரும்பிப் பார்ப்பாள். சிலர் கூறுவார்கள் 'முரட்டு மாலதி' என்று ......

மாலதி எந்நேரமும் சேட் கையை உயர்த்தி மடித்துவிட்டு, ஜீன்ஸ் காலை மடித்துக் கொண்டே நிற்பாள். நாங்கள் 'ரகுமான் எடுவை' என்று பகிடி பண்ணினால், அவள், "இல்லை. நான் புருஸ் லீ எடுவைதான் எடுக்கிறன். எப்போதும் கையாலும், காலாலும் சண்டை பிடிக்கத் தயாராக இருக்கின்றேன். என்னைக் கண்டால் ஆமி ஓடுவான்" என்று கூறுவாள்.

1987இன் முற்பகுதியில் கோட்டைப் பக்கத்திலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் தாக்கப்பட்டது. இத் தாக்குதலில் மாலதி பங்கு கொண்டாள். சண்டை என்றால் மாலதி துடிப்புடன் நிற்பாள். உலங்கு வானூர்தி வருவதையோ, குண்டுவீச்சு விமானம் வருவதையோ, ஷெல் வருவதையோ பார்க்கவும் மாட்டாள். முன்னுக்குச் சென்று, ஆமியை சுடுவதிலேயே குறியாக நிற்பாள். இதே மாதிரித்தான், தொலைத்தொடர்பு நிலையத் தாக்குதலிலும் ஈடுபட்டாள். ஒரு பெண் போராளி இந் நடவடிக்கையில் காயப்பட்டாள். காயப்பட்டவளைத் தூக்கிச் செல்லும்படி மாலதியிடம் பொறுப்பாளரால் பணிக்கப்பட்டபோது (இந்நேரம் சண்டை முடிந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுக் கொண்டிருந்தன) மாலதி செல்ல மறுத்து, "வேறு ஒருவரை அனுப்புங்கள்" என்று கெஞ்சினாள்.

"வேறு யாருமில்லை. சண்டை முடிந்தது தானே. நீங்கள் கொண்டு போங்கோ" என்றபோது, அவ்விடத்தை விட்டுப்போக விருப்பமின்றி, காயப்பட்ட போராளியைத் தூக்கிச் சென்று, மதிலுக்கு அங்கால் வேறு ஒரு போராளியைக் கூப்பிட்டு, "இவரைக் கொண்டு போகட்டாம் என்று பொறுப்பாளர் சொன்னவர்" எனக்கூறி, காயப்பட்ட போராளியை அவசரமாக ஒப்படைத்துவிட்டு மீண்டும் தான் நின்ற இடத்துக்கு விரைந்து ஓடிவந்துவிட்டாள்.

இந்தச் சண்டையின்போது, மாலதியின் உடலின் சில பகுதிகளில் (கை, கால் உட்பட) சிறு, சிறு ஷெல் துண்டுகள் இருந்தன. "மருத்துவமனைக்குச் சென்று பீஸ்களை எடுத்துவிட்டு வா" என்றபோது, "போகமாட்டேன்" என்று மறுத்துவிட்டு, புது 'பிளேற்' ஒன்று எடுத்து, தானே தன் உடம்பில் இருந்து ஷெல் துண்டுகளை வெட்டி எடுத்தாள். தன்னைத்தானே கீறும் அளவுக்கு அபாயகரமான துணிவு கொண்டவள்தான் அவள்.

## மாலதியின் குறும்புகள்

மாலதி, சண்டை செய்வது என்றால் மிகவும் சந்தோசத்தில் துள்ளிக்கொண்டு நிற்பாள். சண்டைக்கான அறிகுறிகள் எதுவும் தென்பட்டால், உடனேயே மகிழ்ச்சியோடு, "ஆமிக்குச் சொல்லியடிப் பேனடி, அடிச்சன் என்றால் நெற்றி அடிதானடி" என்று பாடிக்கொண்டே நிற்பாள்.

1987இன் நடுப்பகுதியில் நாங்கள் கோப்பாய்க்கு வந்தோம். கோப்பாயில் இருந்து ஒவ்வொரு இரவும் நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றிலும் காவற்கடமை நிலைகள் இருந்தன. இதில் நாம் கோப்பாய்ப் பாலத்தில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தோம். இரவில் இரண்டு பிரிவாகப் பிரிந்து படுப்போம். எங்களுக்குக் கிடைத்த இடம் சுடலை. சுடலைக்குள் படுத்திருப்போம். சத்தங்கள் எதுவும் கேட்டால் காவற்கடமையில் நிற்பவர் இன்னும் இரண்டொருவரை எழுப்பிக் கொண்டு மண்மேட்டால் சென்று, ஆமியின் நடமாட்டத்தை அவதானித்து வருவோம்.

மாலதி காவற்கடமையில் நிற்கும்போது, ஏதாவது சத்தம் கேட்டால், தானே தனியாகச் சென்று எதிரியின் நடமாட்டத்தை அவதானித்து வருவாள். எங்கள் நிலைக்கு முன்னால் தண்ணீர் இருந்தது. தண்ணீர்ச் சத்தம் கேட்கும். நாவற்குழி இராணுவ முகாமில் அடிக்கடி விளக்குகளை அணைப்பான் ஆமி. அவ்வேளையில் நாங்கள உசார் நிலைக்கு வருவோம்.



காவற்கடமையில் நிற்கும் மாலதி அடிக்கடி எல்லாரையும் எழுப்புவாள். திடுக்கிட்டு நித்திரையால் எழும்பி "என்னடி" என்றால், "பேயடி, பேயடி" என்று பயமுறுத்துவாள். "உண்மையாய் நான் கறுப்பாய் – வெள்ளையாய் ஆவியைக் கண்டனான்" என்று கூறுவாள். "நேற்று எரிச்ச பெடியன்ற ஆவியடி. இண்டைக்குத்தான் வெளியே போகுதாக்கும்" என்று மேலும் மேலும் எங்களைப் பயமுறுத்துவாள்.

ஒருநாள் நான் ஒரு சீமெந்து மேடைமேல் படுத்திருந்தபோது, மாலதி வந்து எழுப்பிச் சொன்னாள், "எடியே கெதியாய் எழும்படி எழும்படி" என்றாள். அவசரமாக எனது ஆயுதத்தையும் எடுத்துக் கொண்டு, "ஆமியோ வந்திட்டான்" என்று கேட்டபோது, "எடியே, நீ படுத்திருந்த இடம் சமாதியடி" என்றாள். எனக்குச் சரியான கோபம். ஏசிவிட்டுப் போய்ப்படுத்துவிட்டேன். மாலதியின் இந்தத் தொல்லைகளால் மாலதிக்குக் காவற்கடமை நேரம் போடாமல் விடுவோம். இரண்டு நாளால் சண்டைபிடித்து, காவற்கடமை நேரம் போடச் செய்துவிடுவாள்.

காவற்கடமையில் ஈடுபடும் இடத்துக்குச் சென்றதும் "வாடி, நித்திரை கொள்ளும்வரை இடம்பார்ப்போம்." என்பாள். "சும்மா ஓரிடத்தில் இரடி" என்றால், "எடியே எங்கே எங்கே நிலை எடுத்து அடிபடலாம் என்று இடம் பார்த்தால் தானே ஆமி வந்தால் அட்டகாசமாக அடிபடலாம்" என்பாள். பின்னர் இரண்டு பேரும் கோப்பாய் கிறேசர்சரடியில் இருந்து கைதடிப் பாலத் தொங்கல்வரை நடந்து, நடந்து செல்வோம்.

பகலில் எங்களுடைய முகாமில் நிற்போம். பகலில் இரண்டுபேரும் ஒரே சண்டை பிடிப்போம். சற்று நேரத்தில் சமாதானமாகி ஒன்றாக வெளியில் செல்வோம். நான் அடித்துவிட்டு ஓடுவேன். அவள் சந்தி என்றும் பாராமல், கோப்பாய்ச் சந்தியில் துரத்தி வந்து அடித்துவிட்டே திரும்புவாள்.

ஒருநாள் இரண்டுபேரும், துரத்துப்பட்டுக் கொண்டு கோப்பாயில் ஒரு அப்புவின் வாழைத்தோட்டத்துக்குள் சென்றோம். நான் முதலில் சென்று, களைத்துப்போய், "அப்பு தண்ணி தாணை" என வாங்கிக் குடித்துக் கொண்டிருக்க, இவளும் களைத்துப்போய் வந்தாள். "எனக்கும் தண்ணி தா மணி" என்றாள். நானும் தண்ணீரைக் கொடுத்து விட்டு எனக்கு அடிக்காதை என்றேன். அவள் சிரித்து விட்டு வா 'வா பேசுக்குப் போவோம்' என்றாள்.

கோப்பாய் பாலத்தடியில் அடிக்கடி உலங்கு வானூர்தி தாழப் பறக்கும். அந்நேரங்களில் நாம் கிறேசரடிக்கு விரைந்து செல்வோம். இவ்வேளைகளில் மதில்களைப் பாய்ந்து, பாய்ந்து முதலில் கிறேசரடிக்கு செல்பவள் மாலதிதான். மாலதி மதில் பாய்வதில் கெட்டிக்காரி. "இந்தா பார் போறன்" என்றால் அடுத்த நிமிடம் மதிலுக்கு அங்கால் நிற்பாள்.

## கொக்கோகோலாவும் பன்ராவும்

எங்களுக்குக் 'கொக்கோகோலா' குடிக்கக் கூடாது என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மாலதிக்குக் கொக்கோகோலா என்றால் சரியான பிரியம். கொக்கோகோலா குடிக்கக் கூடாது என்று தடைவிதித்த இரண்டாம் நாள் மாலதி, என்னிடம் "வாடி கூல்பாருக்கு போய்வரவோம்" என்றாள். எனக்குத் தெரியும், இவள் கூல்பார் சென்றால் கொக்கோகோலா தான் குடிப்பாள் என்று. நான் வரவில்லை என்றேன். "இண்டைக்கு மட்டும் வா" என்றாள். "சரி வா. கொக்கோகோலா குடிக்கக்கூடாது. வேறு ஏதாவது குடிப்போம்" என்றேன். அந்நேரம் வெளியில் செல்வதென்றால் சாதாரண மானவர் களாகத்தான் உடையணிந்து செல்வோம். கடைக்குள் சென்ற மாலதி இரண்டு பன்ராவுக்கும் இரண்டு கொக்கோ கோலாவுக்கும் சொன்னாள். "ஏன் மாலதி?" என்றேன். சிரித்துக் கொண்டே "பன்டாவை மேசையில் வைத்துவிட்டு, கொக்கோ கோலாவைக் குடிப்போம்" என்றாள். "என்ன மாலதி விசர்க்கதை கதைக்கிறாய். எங்களையல்லோ கொக்கோகோலா குடிக்க வேண்டாம் என்றார்கள். குடித்துக் கொண்டு இருக்கையில் யாராவது எமது ஆட்கள் வந்தால் என்ன செய்யிறது" என்றேன். "இண்டைக்கு மட்டும் குடிப்பம். எனிமேல் குடிக்க வேண்டாமடி" என்றாள். சரியென மேசையில் அமர்ந்தோம். "முதலில் பன்டாவை எடுத்து, அரைவாசியைக் குடித்துவிட்டு மேசையில் வைத்துவிட்டு, பின் கோலாவைக் குடி" என்றாள். இடையில் எதிர்பாராதவிதமாக எமது உறுப்பினர் ஒருவர் வந்தார். நாங்கள் இருவரும் கொக்கோகோலாவைத் தள்ளிவைத்துவிட்டு, பன்டாவை குடித்துக் கொண்டிருந்தோம். அவர் சென்றபின் மீண்டும் கொக்கோகோலாவைக் குடித்துவிட்டு வெளியில் வந்ததும் மாலதி சொன்னாள். "எப்படி மணி என்னுடைய 'ஐடியா'?" என்று. பின் இரவு பொறுப்பாளரிடம் நடந்ததை மாலதி கூறி,

தொடர்ச்சி 10ம் பக்கம்....

# விடுதலைப் புலிகளின் போராட்ட....

தனக்குத் தண்டனை தரும்படி கேட்டாள். இச் சம்பவம் நடந்தது - 1987 - 10 - 09இல்.

மாலதி எவ்வளவு குடிப்படிகளையும் குறும்புகளையும் செய்தாலும், இவளிடம் வீரமும் விசுவாசமும் நிறைந்து காணப்பட்டது. இவள் எவ்வளவு குறும்புகள் செய்தாலும், இவளுக்கெனக் கொடுக்கப்படுகின்ற வேலைகளை அழகாக, முழுமையாக, திறமையாகச் செய்து முடிப்பாள்.

## கடைசி நாள்

1987 - 10 - 10 இல்.

காலையிலேயே தலையில் தோய்ந்துவிட்டு வந்த மாலதி, சமையல் அறைக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு வந்தாள். நானும் ஏற்கெனவே தலையில் தோய்ந்து எனக்குப் பிடித்தமான ஜீன்ஸ், சேட் போட்டிருந்தேன். மீதுடன் சாப்பிட்டு வந்த மாலதி நான் எதிர்பாராத விதமாக என் சேட்டில் கையைத் துடைத்துவிட்டாள். எனக்குப் பேசவார்த்தையின்றி, அவள் மேல் துப்பிட்டேன். அந்நேரம் மாலதி எனக்கு அடிக்கவில்லை. மீண்டும் போய்க் குளித்துவிட்டு வந்தாள். நான் அவளை "என்னுடன் கதைக்க வேண்டாம்" எனக் கூறிவிட்டேன்.

அன்று காலையே எமக்கெல்லாம் புதிய ஆயுதங்கள் கொண்டுவந்து தரப்பட்டன. மாலதிக்கு எம்-16 ஆயுதம் கொடுக்கப்பட்டது. மாலையில் எங்களை ஏற்ற வாகனம் வந்தது. அதில் எங்களுடைய குழுவை உடைப்பைகளுடன் ஏறச் சொன்னார்கள். நாங்கள் தயாரான போது ஒரு சின்னப் பிரச்சினை வந்தது. எமது குழுவில் நான்கு எம்-16 இருந்தது. எம்-16 உடன் உள்ள ஒருவரை வேறு குழுவுக்குக் போகும்படி பணிக்கப்பட்டது. இதில் இரண்டுபேர் குழுத்தலைவிகள். ஒருவர் மருத்துவம் செய்பவர். ஆகவே மாலதிக்கே அடுத்த குழுவுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. "போக மாட்டடேன்" என்ற மாலதி, பின் பொறுப்பாளரின் கட்டளைக்குப் பணிந்து, அடுத்த குழுவுடன் நிற்கச் சம்மதித்தாள்.

வாசலில் கண்ணீர் மல்க மாலதி நின்று கொண்டிருந்தாள். நாங்கள் எமது உடைப்பைகளுடன் வாகனத்தில் ஏறிக் கொண்டிருந்தோம். நான் என்னுடன் கதைக்க வேண்டாம் என்று சொன்னதால், மாலதி எனக்குக் கிட்டே வரவில்லை. வாகனம் புறப்படத் தயாரானபோது, நான் மறந்துபோய்விட்ட எனது சப்பாத்தை எடுத்துக்கொண்டு, ஓடிவந்தாள் மாலதி. கண்ணீர் மல்க என்னிடம் சப்பாத்தைத் தந்த மாலதி, "என்னோடு கதைக்கமாட்டியா மணி?" என்றாள். "இல்லை. நான் கதைப்பேன். கோபத்திலைதான் அப்பிடிச் சொன்னேன்" என்றேன். நாங்கள் சண்டைக்குத் தயாராகுறோம் என்பது எமக்குத் தெரியும். மாலதி சொன்னாள் 'கவனமாக நல்லா அடிபடு மணி. இருவரும் உயிருடன் இருந்தால் மீண்டும் சந்திப்போம்' என்றாள். இதுதான் மாலதி பிரிவின் துயரத்தோடு இறுதியாக எனக்குச் சொன்ன உறுதியான வார்த்தைகள். இறுதியாக நான் கண்ட மாலதியின் குழந்தைத்தனம் தெரியவில்லை. மாறாக போருக்குத் தயாரான கம்பீரமான படைவீரனின் சாயல் அவள் முகத்தில் படிந்திருந்தது. நாங்கள் மாலதிக்கு கை அசைக்கவும், எங்களை ஏற்றிய வாகனம் அவள் கை அசைத்தபடி நிற்க, பறந்து சென்றது.

மாலதியைப் பிரிந்த கவலை எனக்குமட்டும் இருக்கவில்லை. எங்கள் குழுவுக்கே இருந்தது. ஏன் என்றால் அவள்தான் எங்கள் குழுவில் கலகலப்பானவள். பயிற்சிப் பாசறையில் இருந்து ஒரே குழுவில் இருந்த எங்களுக்கு, பிரிவு என்று வந்ததும் மிகவும் கடினமாக இருந்தது. வாகனம் போய்க் கொண்டிருந்தது. என் மனம் வாகனத்தை விட வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. என் உள்ளுணர்வு கூறியது நான் மாலதியை நிரந்தரமாக பிரிந்து விடுவேன் என்று.

1987-10-10 அன்று நள்ளிரவில்.......

கோப்பாயில் எம்மவருக்கும், இந்திய இராணுவத்துக்குமிடையே சண்டை தொடங்கிய செய்தி கிடைத்தது. தொலைத் தொடர்பில், சண்டையின் செய்திகளையும் பணிப்புரைகளையும் கட்டளைகளையும் பொறுப்பாளருடன் இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரென தொலைத்தொடர்பில் ஒரு குழு, இன்னொரு குழுவுக்கு பெண் போராளிகளில் ஒருவர் வீரச்சாவு என்ற செய்தியைத் தெரிவித்தது. எனக்கு ஒரு மாதிரி இருந்தது. நீண்டநாள் நட்புறவால் மனம் சொன்னது 'ஆண்டவரே மாலதியாக இருக்கக்கூடாது' என்று. பொறுப்பாளரைக் கரைச்சல் பண்ணினேன். 'பெயர் என்ன என்று தொடர்பு எடுத்து கேளுங்கோ. கேளுங்கோ' என்று. திடீரென தொலைத் தொடர்பு, வீரச்சாவடைந்தது மாலதி என்ற செய்தியைத் தாங்கி வந்தது.

நானோ என்றுமே சந்தித்திராத அதிர்ச்சியைச் சந்தித்தேன். ஏனெனில் பெண்போராளிகளில் முதல் முதலில் இவளின் இழப்பைத்தான் நான் சந்தித்தேன். 'ஓ' வெனப் பெரிதாக, நான் எங்கே நிற்கின்றேன் என்ற நினைவு கூட இல்லாமல் அழுதேன். பொறுப்பாளர் சிறிது நேரத்திற்குப் பின் என்னை ஏசினார். 'எங்கே நிற்கிறாய் என்று தெரியாமல் ஏன் இப்படிச் சத்தமாய் அழுகின்றாய்' என்று. என்றுமே பொறுப்பாளரை எதிர்த்துக் கதைக்காத நான், மாலதியின் பிரிவால் அன்று பொறுப்பாளரையே எதிர்த்துக் கதைத்துவிட்டேன்.

மாலதி தினமும் சொல்வாள், பெண்புலிகளில் நான்தான் முதல் வீரச்சாவு அடைவேன் என்று. அவள் சொன்னதைப் போலவே, மாலதியே விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண்புலியாக, புரட்சிப் பெண்ணாக சரித்திர நாயகி ஆகிவிட்டாள்.

நானும், மாலதியும் கோப்பாயில் கிறேசரடி என்னும் இடத்தில் நடந்து திரிவோம். அவள் எதிரியை எதிர்கொள்ளக் காத்திருந்த, நடைபயின்ற, குறும்புத்தனங்கள் செய்த அதே இடத்தில் எதிரியின் குண்டை ஏந்தி, சரித்திர நாயகியாகச் சரிந்தாள். இவள் உலவிய, இவள் சரித்திர நாயகியாகிச் சரிந்த அதே இடத்தில் அவளுக்காகக் கட்டப்பட்ட கல்லறை நிமிர்ந்து, அவளின் வீரத்தை, பசுமையான அவளின் நினைவுகளை உணர்த்தி நிற்கின்றது.

இப்படித்தான் மாலதி வீரச்சாவைச் சந்தித்துக் கொண்டாள். அன்று இரவு கோப்பாய் கைதடி வீதியாக வரும் வாகனங்கள் அனைத்தையும் மறித்துப் பரிசோதனை செய்யும்படி மாலதி நின்ற குழுவினரிடம் பணிக்கப் பட்டிருந்தது. எல்லோருமே காவற்கடமையில் நிற்கும்போது வருகின்ற வாகனம் ஒவ்வொன்றையும் பரிசோதனை செய்து அனுப்பினார்கள்.

கோப்பாய் சுடலையடியில் மாலதி காவற்கடமையில் நின்றபோது, வாகனங்கள் வந்திருக்கின்றன. ஓடிச்சென்று வாகனத்தை மறித்திருக்கிறாள். மாலதி மறித்தது இந்திய இராணுவத்தின் ஆமட்கார்களை. திடும் திடுமென குதித்த இராணுவத்தினரவைகளை கண்டபாட்டில் அடிக்கத் தொடங்கினர். மாலதியும் எதிர்த் தாக்குதலைத் தொடுத்தாள். பின் எமது எல்லாக் குழுவினரும் மாலதியின் பக்கம் சென்று சண்டையில் இறங்கினர். எதிர்பாராத விதமாக ஏராளமான இராணுவத்தினர் எம்மவரது குழுவைச் சுற்றி வளைத்தனர். தாக்குதலைத் தொடுத்தனர். இவ்வேளையில் மாலதி படுகாயமடைந்து விட்டாள். காயமடைந்தவளைத் தோழிகள் தூக்கி வரும் போது மாலதி 'எல்லோரும் வீணாகச் சாக வேண்டாம். என்னை விட்டுவிட்டு என்ர எம் 16ஐ (ஆயுதம்) கொண்டு நீங்கள் ஓடுங்கோ' என்றிருக்கிறாள். தோழிகள் 'இல்லை. நாங்கள் உன்னைக் கொண்டு போகின்றோம்' என்று கூறிய அடுத்த நிமிடமே மாலதி சயனைட்டைக் கடித்து விட்டாள். ஏனென்றால் இராணுவத்தினர் சுற்றிவளைத்துவிட்டனர். கோப்பாய் கிறேசரடியில் மாலதி தன்னை அர்ப்பணித்தாள். ஆமியின் சுற்றிவளைப்பால், மாலதியின் ஆயுதத்தைத்தான் முதலில் கொண்டு வந்தார்கள். மாலதி சொன்னது போல், அடுத்த நாள் தான் மாலதியின் புகழுடலை மீட்டெடுத்தார்கள்.

இப்படித்தான் ஒவ்வொரு போராளிகளும் எங்களின் சொந்த மண்ணின் விடிவிற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்றார்கள். எல்லாப் போராளிகளும் தங்கள் உயிருக்கும் மேலாக தங்களின் ஆயுதங்களைத்தான் நேசிக்கின்றார்கள். இந்த வரிசையில் மாலதியும்.........

கோப்பாய் கிறேசரடியில் மாலதியின் பசுமையான நினைவுகளைத் தாங்கி நிற்கும் அவளது கல்லறைக்கு அடிக்கடி என் கால்கள் விரையும். அங்கிருந்து நான் திரும்புவது உரமேறிய உறுதியான போராட்ட உணர்வோடு மட்டுமே.........


# மாவீரர் நாள் 1997 - பிரான்ஸ்

**ஓவியம் - பேச்சு - சிறுகதை / கவிதை - பாட்டுத்திறன் போட்டிகள்**

*1997 - மாவீரர் நாளை முன்னிட்டு பேச்சு, ஓவியம், பாட்டுத்திறன், சிறுகதை / கவிதை போன்ற போட்டிகள் எம்மால் நடாத்தப்படவுள்ளன. போட்டிகளில் முதலிடத்தைப் பெறும் போட்டியாளர்களுக்கு மாவீரர் நினைவு தங்கப் பதக்கம் வழங்கப்படுவதுடன், தரமான ஆக்கங்கள் 'மாவீரர் சிறப்பிதழ் - 1997' மலரிலும் இடம்பெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.*

விண்ணப்ப முடிவு முடிவு திகதி 15 - 10 -97 வரை நீடிக்கப்பட்டுள்ளது

விண்ணப்பப்படிவங்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும்
தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்
☎ 0143581142

# தமிழீழ பெண்கள் தினம்

**2 ம் லெப். மாலதியின் 10 வது ஆண்டு நினைவு தினம்**

**இடம் :**
CONWAY HALL
REDLION SQUARE
HOLBORN
LONDON WC1

**திகதி :**
11 - 09 - 1997
சனிக்கிழமை
மாலை 3 மணி - 7 மணி வரை

ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் பங்குபற்ற வேண்டிய முக்கிய நிகழ்ச்சி இது

தொடர்புகளுக்கு : தமிழ்ப் பெண்கள் சுதந்திர அமைப்பு
ஈழம் இல்லம் ☎ 0171 - 403 4554

# தாயகம் நோக்கிய பயணம்

லியோன் யூரிஸ்



## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினேழு

(தொடர்ச்சி)

**அ**க்கிவா உயிரோடு தோலுரிக்கப்பட்ட இடத்தில் தான் இன்னும் நதி கடலுடன் கலந்து கொண்டிருந்தது.

நகர சிதைவுகளுக்கு சில யார் தெற்கே, யூதக் கூட்டு மீன்பிடிக் கிராமமான (Sdot yam) கடல் வயல்கள் என்ற பொருள் கொண்ட ஸ்டொட் யாமின் கட்டிடங்களின் தொடர்கள் ஆரம்பமாகின. இந்த இரவிலே எந்தவொரு மீனவனோ அல்லது அவர்கள் மனைவியரோ நித்திரை கொள்ளவில்லை.

மாறாக, அவர்கள் எல்லோரும் கிட்டத்தட்ட 200 பேர் வரை சிதைவுகளிடையே குனிந்து ஒளித்திருந்தபடி மௌனமாக கடலை நோக்கித் தங்கள் பார்வைகளைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இவர்களோடு கூட மேலும், 200 பால்மாக் போராளிகளும் இணைந்து கொண்டனர்.

கடல் நுரைகளுடே நீட்டிக் கொண்டிருந்த புராதனமான ட்ரூசஸ் (Druses) கோபுரத்திலிருந்து ஒளி சமிஞ்ஞை ஒன்று ஒளிர்ந்து மறைந்தது. அவர்கள் எல்லோரும் கிளர்ச்சிக்குள்ளாகினர்.

"ஸ்டார் ஒவ் டேவிட்" டில் நின்று கொண்டிருந்த பில் பிறையின் பற்களிடையே சுருட்டொன்று கடிபட அவன் கைகள் அப்பழைய கப்பலின் சுக்கான் சக்கரத்தில் இறுகப் பதிந்திருந்தன. ஆழம் குறைந்த இடங்களையும், பயங்கரமான பவளக் கற்பாறைப் படிவுகளைத் தவிர்த்து மெதுவாக அங்குலம், அங்குலமாகக் கப்பலைக் குறுக்கும் நெடுக்குமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். மேற் தளத்திலோ தங்களைக் கரையோரச் சலாகைகளிற் தாங்கவிட்டபடி அகதிகள் நின்று கொண்டிருந்தனர்.

"ஸ்டார் ஒவ் டேவிட்" தனது மரத்தாலான அடித்தளம் ஒரு சிறுபாறை மீது நடுக்கத்தோடு கிறிச்சிட்டபடி, கிறீச்சென்றது. ஒரு தனிச் சீறுவானம் ஒன்று வானை ஊடறுத்துச் சென்றது. கடற்கரை அமளிப் பட்டது. எல்லோரும், கப்பலில் பக்கப்பகுதியால், தோள்மூட்டு உயரத்துக்கிருந்த கடல்நீரினுட் பாய்ந்து, பல நூறு யார் தூரத்துக்கு அப்பால் இருந்த கரையை நோக்கி அடி மேல் அடியாக அலைகளினூடாக மிகுந்த கஷ்டத்துடன் சென்றனர்.

சீறுவானம் மேலே வெடித்ததும், மறைவிலிருந்த மீனவரும், பால்மாக்குகளும் மறைவை விட்டு வெளியே வந்து அகதிகளை நோக்கி அலைகளினூடே நகர்ந்தனர். சிலர் பள்ளங்களில் இறங்கிக் கவிழ்ந்தனர். சிலர் அலைகளால் புரட்டப்பட்டு கற்களில் விழுந்தனர். ஆனால் எதுவுமே அவர்களைத் தடுக்கவில்லை. இரண்டு பிரிவினரும் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். கரையிலிருந்து வந்த பலமான கரங்கள் அகதிகளைக் கரையை நோக்கி இழுத்துச் சென்றன.

"விரைவாக உங்கள் உடைகளைக் களைந்து விட்டு இவைகளை அணிந்து கொள்ளுங்கள்" என அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது.

"அடையாளப் பத்திரங்கள் ஏதாவது இருந்தால் அவற்றை எறிந்து விடுங்கள்."

"உடையணிந்து கொண்டவர்கள் விரைவாக எங்கள் பின்னே வாருங்கள். நடவுங்கள்..... நடவுங்கள்"....

"சப்தம் செய்ய வேண்டாம் அமைதியாயிருங்கள்."

"வெளிச்சமெதுவும் வேண்டாம்."

அகதிகள் தங்கள் உடல்களிலிருந்த உடைகளைக் கிழித்தெறியாத குறையாகக் கழற்றிவிட்டு மீனவர்களின் நீலநிறச் சீருடைகளில் புகுந்தனர்.

"எல்லோரும் இரண்டறக் கலந்து கொள்ளுங்கள்,"

"ஸ்டார் ஒவ் டேவிட்" தளத்தில், பால்மாக்குகள் எவ்வளவு விரைவாகக் கரைசென்று மீள வர முடியுமோ அவ்வளவு விரைவாகப் பிள்ளைகளைக் கரேன் அவர்களுக்குக் கையளித்துக் கொண்டிருந்தாள். பலமான அலைகளில் தளம்பாத ஆட்களே இவ்வேலைக்குத் தேவையாக இருந்தது.

"கெதியாக .... கெதியாக"

"பரிசுத்தமான தங்கள் தாயக மண்ணை முத்தமிட விழுந்தவர்களிடம் இருந்து எவ்விதத்திலும் கட்டுப்பாடுகள் இல்லாமல் உணர்ச்சியோடு கூடிய கூக்குரல்கள் எழுந்து கொண்டிருந்தன,

"நிலத்தை முத்தமிட உங்களுக்குப் பின்பு நேரமிருக்கும். இப்போ நேரத்தை வீணாக்கி விட வேண்டாம்.... சீக்கிரம் நகருங்கள்...."

பில்பிறை தளத்தில் நின்றபடியே ஒரு ஒலிபெரக்கியினூடாகக் கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான். ஒரு மணி நேரத்தினுள் ஒருசில டசின் குழந்தைகளையும், பிரிவுத் தலைவர்களையும் தவிர மற்றவர்கள் கப்பலை விட்டுச் சென்று விட்டனர்.

செசாறியாவில் நடக்கும் கரையேறும் நடவடிக்கையிலிருந்து, பிரிட்டிஷ் துருப்புகளின் கவனத்தைத் திசை திருப்பும் முகமாக, ஹைபாவுக்குத் தெற்கே கடற்கரையிலிருந்து வடக்கில் 30 கிலோ மீற்றர் தூரத்திலிருந்த பிரிட்டிஷ் களஞ்சியங்கள் மீது, பால்மாக் அணியொன்று பயங்கரத் தாக்குதல் ஒன்றை நடத்தியது.

கடற்கரையிலோ பால்மாக்குகளும், மீனவர்களும் மிக விரைவாகச் செயற்பட்டனர். சிலர் கிராமத்தினுள் அழைத்துச் செல்லப்பட்டனர். சிலர் லொறிகளில் ஏற்றப்பட்டு உள்நகரங்களுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கடைசியாய் எஞ்சியிருந்த குழந்தைகளும் கையளிக்கப்பட்டதும். இறங்கப் பாவிக்கும் ஏணியை அகற்றிய பில்பிறை பகுதித் தலைவர்களையும் கடலுள் குதிக்கக் கட்டளையிட்டான்.

> "ஒரு மனிதனின் வாழ்நாளில் தான் வாழ்வதற்காக தன் மனம் வெறுக்கும் எவ்வளவோ காரியங்களை செய்கின்றான். அவமானம், சித்திரவதை, மரணத்திற்குக் கூடப் பயப்படாமல் தாங்கள் கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்கும் உலகின் இந்த சிறிய தொகை மனிதர்கள்...."

குளிர்ந்த நீர் தன்னை மூழ்கடிப்பதைக் கரேன் உணர்ந்தாள். சிறிது நேரம் தான் நுனிக்காலில் நின்று, நீரில் மிதந்து தன்னைச் சமப்படுத்தியபடியே தான் போகவேண்டிய திசையை அனுமானித்துக் கொண்டாள். அவள் காலுன்றி நிற்கக்கூடிய தூரத்துக்கு நீந்திச் சென்றாள். அவளுக்கு முன்னதாக, கடற்கரையில் ஜெர்மனியிலும், ஹிப்ரூவிலும் குழப்பமான முறையில் கூவுவது கேட்டது. அவள் ஒரு பெரிய பாறையை அண்மித்து அதன்மேல் கைகளையும், கால்களையும் ஊன்றி ஊர்ந்து சென்றாள், எழுந்து வந்த அலையொன்று அவளை மீளவும் கடலில் வீசியடித்தது. இப்போது அவள் நல்ல கடினமான நிலத்திற் காலைவாரி விடும் கீழ் இழுவையை மீறி, அடிமேலடியாகக் கரையை நோக்கிச் சென்றாள். திரும்பவும் தடுமாறிக் கீழே விழுந்த அவள் கரையை நோக்கி ஊர்ந்தாள்.

ஊடுருவிச் செல்லும் சைரன் ஓசை!

காது செவிடுபடும்படி ரைபிள்களின் வெடியோசை!

கடற்கரையில் எல்லோரும் சிதறியோடிக் கொண்டிருந்தனர். கரேன் முழங்காலளவு நீரில், தன் பக்கங்களை இறுகப்பிடித்து, மூச்சுவிட அவதிப்பட்டபடி எழுந்தாள். அவளுக்கு நேராக முன்னால்,அரை டசின் காக்கி சீருடை அணிந்த பிரிட்டிஷ் போர்வீரர்கள் கையில் குண்டாந்தடிகளுடன் நின்றிருந்தார்கள்.

முடியாது............முடியாது...........முடியாது.....

என அவள் அலறினாள். அலறிக் கொண்டும், பிராண்டிக் கொண்டும், கால்களால் உதைந்து கொண்டும் அந்தத்தடுப்பு வலைபோல் நின்றிருந்தவர்களூடாகப் பாய்ந்து செல்ல முயன்றாள். பலமான ஒரு கை அவளைப் பிடித்து மீண்டும் கடல் அலைகளுள் இழுத்தது. அவளுடைய பற்கள் அந்த இராணுவ வீரனது கையில் இறுகப் பதிந்தன. அவன் வலியால் அலறியபடியே அவளை விட்டுவிட்டான், அவள் மீளவும் ஒரு காட்டு மிராண்டிபோல் போராடிக் கொண்டே முன்நோக்கிப் பாய்ந்தாள். அடுத்த சிப்பாய் தனது குண்டாந்தடியை மேலே உயர்த்திக் கீழே இறக்கினான். அவளுடைய தலையிலிறங்கி மோதியது. கரேன் வலியால் அனுங்கியபடி, உடம்பு சோர்ந்து, மயக்கமாகி அலைகளிற் புரண்டாள்.

அவள் கண்களை விழித்தபோது, அவள் தலை மிக மோசமாக வலித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவள், பார்வையில் மழிக்காத முகத்துடனும் உற்சாகம் இழந்த கண்களுடனும் தெரிந்த பில்பிறையின் முகத்தைக் கண்டதும் புன்முறுவல் பூத்தாள்.

"என்னோடு வந்த பிள்ளைகள்..." அவள் அலறிக்கொண்டு கட்டிலை விட்டு எழ முயன்றாள். பில்லுடைய கைகள் அவளைப் பிடித்துக் கொண்டன.

"கவலைப்படாதே. அதிகமானவர்கள் தப்பிவிட்டார்கள். சிலபேர் இங்கிருக்கிறார்கள்."

கரேன் கண்களை மூடி, பெருமூச்சு விட்டபடி கட்டிலில் திரும்பவும் சாய்ந்து கொண்டாள்.

"நாங்கள் எங்கே இருக்கிறோம்?"

"பிரிட்டிஷ் தடுப்பு முகாம். அட்லிட்டிலுள்ளது. அது ஒரு அற்புதமான நிகழ்வு. அரைவாசிப் பேருக்கு மேல் தப்பிச் சென்று விட்டார்கள். வந்த கோபத்தில், பிரிட்டிஷார் கையில் அகப்பட்டவர்களை எல்லாம், சுற்றி வளைத்து இங்கே தள்ளிக் கொண்டு வந்து விட்டார்கள். இங்கே நாங்கள் கப்பல் மாலுமிகள், மீனவர்கள், அகதிகள் என எல்லாரும் கலவையாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறோம். உனக்கு எப்படி இருக்கிறது?"

"எனக்கு மிக மோசமான நிலையாயிருக்கிறது. என்ன நடந்தது?"

"நீ. தனியாளாக பிரிட்டிஷ் ராணுவத்தைத் தாக்க முற்பட்டாய்?"

அவள் போர்வையை உதறித் தள்ளிவிட்டு, கட்டிலில் எழுந்து உட்கார்ந்து தன் தலையில் ஏற்பட்டிருந்த வீக்கத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டாள். அவளுடைய உடைகள் இன்னும் உலராமலேயே இருந்தன. அவள் எழுந்து சிறிது தடுமாறியபடி, நடந்து கூடார வாசலுக்கு வந்தாள். மேலும், நூற்றுக்கணக்கான கூடாரங்களும், உயரமான முட்கம்பிச் சுவரும் அவளுக்குத் தென்பட்டன. முட்கம்பி வேலிக்கப்பால் பிரிட்டிஷ் சிப்பாய்கள் காவலுக்கு நின்றிருந்தனர்.

"எனக்கு என்ன நிகழ்ந்ததென்றே எனக்குப் புரியவில்லை. என்னுடைய வாழ்க்கையில் ஒருவரையுமே நான் தாக்கியதில்லை.

தொடரும்...



# தமிழீழத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகள்

### உள்ளூர் பயிர்ச்செய்கைக்கு ஊக்குவிப்பு

அரசு உணவுத்தடையை ஆயுதமாகப் பயன் படுத்திவரும் இவ்வேளையில் வன்னியில் உள்ள புதுக்குடியிருப்பு என்ற கிராமத்தில் உள்ள விவசாயிகள் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவு டன் தமது சொந்த மண்ணிலேயே பெருமளவு பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வெற்றி கொண் டுள்ளதை த.பு.க பொறுப்பாளர் திரு ரவி பாராட்டி யதுடன் பரிசில்களையும் வழங்கி கௌரவித்து ஊக்குவித்துள்ளார்.

### உள்ளூர் மக்கள் உதவியுடன் பாதை திருத்த வேலைகள்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மட்கும்பான் ஸ்கந்த புரம் வீதியை உள்ளூர் தமிழர்களின் உதவியுடன் திருத்தி அமைத்துள்ளது. அவ்வூரிலுள்ள மக்கள் முழுநாளும் சிரமதானம் மூலம் வீதியைத் திருத்தி அமைத்ததால் அவ்வீதி நன்கு செப்பனிடப்பட்டு அமைந்துள்ளது.

### சத்துணவின்மையால் இறக்கும் குழந்தைகள்

சிறிலங்கா அரசு தென்தமிழீழப்பகுதியில் முக்கிய மாக மட்டுநகரில் அரசபடைகளின் கட்டுப்பாட் டில் இல்லாத பகுதியில் உணவுத்தடையை விதித்துள்ளது.. இதனால் பிறக்கும் குழந்தைகள் சத்துணவின்மையால் இறக்கும் வீதம் அதிகரித் துள்ளது. இப்பகுதியில் 96.619 மக்கள் வாழ்வது குறிப்பிடத்தக்கது. இதில் 75 வீதத்திற்கும் மேற் பட்டவர்கள் வறுமைக்கோட்டில் வாழ்கின்றனர். இவ்வேளையில் அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவிகளை அரசு தடை செய்துள்ளது.

### புதிய வீடமைப்புத் திட்டம் திறப்பு

கிளிநொச்சிப் பெருநிலப்பரப்பில் அரச அதிபரின் தலைமையில் இடம்பெயர்ந்து வந்த தமிழ் மக்களுக்கு த.பு.கழகத்தில் ஆதரவுடன் இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு புதிய வீடமைப்புத் திட்டமொன்று கடந்த 25 ஆகஸ்ட் திறந்து வைக்கப்பட்டது. இதனை இந்து இளைஞர் மன்றம் பராமரித்து வருவார்கள்.

### வறுமையில் வாடுவோருக்கு உடனடி நிவாரணம்

அரச தாக்குதலால் நூற்றுக்கும் அதிகமாக சிறுவர்கள் தமது பெற்றோர்களையும் வயோதியர் களும் தமது நெருங்கிய உறவினர்களையும் இழந்தமையால் தமது நாளாந்த வாழ்வுக்காக வீதியோரங்களிலும் வீடு வீடாகவும் உணவுக்காக அலைந்து திரிகின்ற நிலை கண்டு த.பு. கழகம் சிறுவர் பராமரிப்பு நிலையத்தையும் முதியோர் பராமரிப்பு நிலையத்தையும் உடனடியாக நிறுவி அவர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்ற வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததுடன் சிறுவர்களுக்கான ஆரம்ப பாடசாலைகளையும் நடாத்தி வருகின் றது. பெற்றோரை இழந்த சிறுபிள்ளைகளைப் பராமரிக்கும் திட்டத்தையும் விரிவுபடுத்தியுள்ளது.

### வன்னியில் ஓர் ஆயுர்வேத வைத்தியசாலை

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட மருத்துவத் தடையை முறியடிக்குமுகமாக த.பு.கழகம் ஓர் ஆயுர்வேத வைத்தியசாலையொன்றை வன்னியில் ஆரம்பித்துள்ளனர். இது காலங்காலமாக எமது மக்கள் பாரம்பரிய வைத்தியத்தைத் தொடர்வ தற்கு ஊக்குவிப்பாகவும் அமைந்துள்ளது. இந்த வைத்திய நிலையத்திற்கு புதுக்குடியிருப்பு வைத்திய நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

### த. பு. கழகத்தில் ஆதரவுடன் விளையாட்டுப்போட்டி

சிறிலங்கா அரச படைகளின் தொடர்ச்சியான இராணு வ நடவடிக்கைகளால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பராமரிப்புத் திட்டமாக நிறுவப்பட்டுள்ள தெரங்கண்டல் கலைமகள் பராமரிப்பு நிலையம் த.பு.கழகத்தில் ஆதரவுடன் கடந்த ஆகஸ்ட் மாதம் விளையாட்டுப் போட்டி யொன்றை நடாத்தி உள்ளது. இச்செயற்பாடு போர்ச்சூழலில் சிறுவர்களின் மனோநிலை பாதிக் காது இருப்பதற்கான திட்டங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

### உடல் நலிந்து பிறக்கும் குழந்தைகள்

தமிழ் மக்கள் மீது தொடுத்துள்ள போரினாலும் உணவுத்தடையினாலும் பிறந்த குழந்தைகளும் அவர்களின் தாய்மாரும் சத்துணவின்றி நலிவுற்று வருவதை நிவர்த்தி செய்யுமுகமாக வன்னிப்பெரு நிலப்பரப்பில் போசாக்குபுனர்வாழ்வு நிலையங் களை த.பு.கழகத்தினர் ஆரம்பித்து நடாத்தி வருகின்றனர். இதன் மூலம் உணவுத் தடை-யைப் போர் உபாயமாகப் பயன்படுத்தும் செயற்பாடு முறியடிக்கப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவில் போசாக்கு நிலையம் திறப்பு

த.பு.கழகத்தினர் முல்லைத்தீவில் நிறுவிய போசாக்கு நிலையத்தை கெயர் நிறுவன அதிபர் திரு மார்க் பிரதம அதிதியாகக் கலந்து திறந்து வைத்தார். இந்நிலையத்தால் அப்பகுதியில் வாழகின்ற போசாக்கற்ற சிறுவர்கள், தாய்மார்கள், முதியோர்கள் பெரிதும் பலனடைகின்றனர்.

### பாடசாலைச்சிறுவர்களுக்கு இலைக்கஞ்சி விநியோகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் சிறுவர்களுக்கு அவர்களின் பசிப்பிணியைப் போக்குமுகமாக த.பு.கழகம் மதிய உணவாக இலைக்கஞ்சியை விநியோகித்து வருகிறது.

### வசந்தா நினைவு வீடமைப்புத் திட்டம்

வசந்தா நினைவு வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சிறுவர்களுக்கு த.பு.கழகத்தினர் விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்திப் பரிசில்களையும் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியை த.பு.கழகத் துடன் இணைந்து முல்லைத்தீவு வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கழகத்தினர் சிறப்பாக நடாத்தினர்.

### இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

அக்கராயன் அபிவிருத்திக்கழகத்தினர், அக்க ராயன் மகளிர் அமைப்பு ஆகியவை த.பு.கழகத் தின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்க ளுக்கு அப்பியாசப்புத்தகங்கள், எழுதும் உபகர ணங்கள், கணித உபகரணங்கள் ஆகியவற்றை இலவசமாக வழங்கியுள்ளன.

## ஈஸ்ட்ஹாமில் எழுந்த ஈழ எழுச்சி கானங்கள்

லண்டன் ஈஸ்ட்ஹாமில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி சேகரிப்புத் திட்டமாக கடந்த ஞாயிறு 28.09.97 அன்று பிளசற் பாடசாலை மண்டபத்தில் அரங்கு நிறைந்த தமிழ் நெஞ்சங் களின் முன்னிலையில் சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் அவர்களின் கர்நாடக இன்னிசை தமிழின எழுச்சிப் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. தாயே வாழ்கவே செந்தமிழ்த்தாயே வாழ்கவே என்ற பாடலுடன் ஆரம்பமாகி பல்வேறு தமிழ் ஈழ எழுச்சிப்பாடல்களை தமிழ் உணர்வுடன் பொன் சுந்தரலிங்கம் அவர்கள் பாடிய போது தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக அதனைச் செவிமடுத்துக் கேட்டனர். இந்நிகழ்ச்சியினூடான 1000 பவுண்கள் சேகரிக்கப்பட்டு தமிழீழத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழத்தின் உடனடி வேலைத் திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

பொன் சுந்தரலிங்கம் அவர்களை லண்டனுக்கு முதன்முதலாக வரவழைத்து நிகழ்ச்சி ஒன்றை நடாத்திய புங்குடுதீவு நலன்புரி மன்றத்தினர் த.பு.கழகத்தின் வேலைத்திட்டங்களுக்கு நிதியாக 1101 பவுண்கள் அன்பளிப்புச் செய்துள்ளனர். இநநிகழ்ச்சியில் த.பு.கழகத்தின் சார்பில் பேசிய பேச்சாளர்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற மக்கள் மத்தியில் உள்ள கலை கலாச்சார சமய அமைப்புகள் இங்குள்ள மக்களின் நலன்களைப் பேணு வது மட்டுமல்லாது தாய் மண்ணை நினைவு கூர்ந்து அங்கு வாழும் எமது சகோதரர் களின் நல்வாழ்வுக்காக த.பு.. கழகத்தினரால் நடாத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கு உதவி செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.


அன்பார்ந்த தமிழ் மக்களே!

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம் இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பணம் அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
(பிரித்தானிய கிளை)
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow,
London E17 4SA
தொலைபேசி இல: 0181 - 520 5876

தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| **TRO** Canada: | Ph: (1416)463 7647 |
| **TRO** Denmark: | Ph: (4520)23 88 97 |
| **TRO** France: | Ph((331 46) 489 850 |
| **TRO** Germany: | Ph: (4921) 665 8508 |
| **TRO** U.K.: | Ph: (44181) 520 5876 |
| **TRO** Italy: | Ph; (39 91) 611 3179 |
| **TRO** Malaysia: | Ph: 603 255 2472 |
| **TRO** Netherland | Ph: 31 72 644 442 |
| **TRO** New Zealand ; | Ph: (649) 537 0258 |
| **TRO** Norway: | Ph: (47 22) 646 592 |
| **TRO** South Africa: | Ph: (27 471) 310 123 |
| **TRO** Sweden: | Ph: (4686) 870 649 |
| **TRO** Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| **TRO** U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| **TRO** Australia: | Ph:Fax:(613) 9800 3899 |

# போரும் பொருண்மியமும்

## தெற்காசியாவில் விருத்தியடைந்து வரும் கணனித் தொழில்

முதன்முதலில் அமெரிக்கா கணனி (Computer) ஐக் கண்டுபிடித்தபின், அதனில் பாவிக்கப்படும் கணனி இயக்கி (Software) இன்று உலகில் ஒரு முக்கிய பாவனைப் பொருளாக மாறிவருகின்றது. தற்போதைய உலகின் பாவனைக்கான கணனி இயக்கியில் 70% உற்பத்தி அமெரிக்காவிலேயே செய்யப்படுகிறது. இந்நிலை மிகவிரைவில் மாறி வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் இந்த கணனி இயக்கி உற்பத்தியை முற்றுமுழுதாகக் கைப்பற்றும் நிலை வரும் என அமெரிக்கன் சயன்டிஸ்ட் (American Scientist) எனும் விஞ்ஞானப்பத்திரிகை கூறுகின்றது. இதில் இந்தியாவும் அதனைச் சூழவுள்ள நாடுகளும் முக்கிய பங்கு வகிக்குமென மேலும் அப்பத்திரிகை கூறுகின்றது. இதற்கான முக்கிய காரணம் கம்பியூட்டர் கல்வியை நன்கு கற்ற தொழிலாளர்கள் இந்நாடுகளில் அதிகம் காணப்படுகிறார்கள். சராசரியாக ஒரு கணனி இயக்கி நிரல் (Software programme) செய்வதற்கான செலவு இந்தியாவில் $125 ஆகவும் அமெரிக்காவில் $925 ஆகவும் காணப்படுகிறது. இதனால் கணனி இயக்கி பாவிக்கும் இராட்சத தொழில் நிறுவனங்கள் (Giant Companies) என வர்ணிக்கப்படும் IBM, Hewlet Packard, British Telecom, Texas Instruments, Mitsubishi, AT & T என்பன வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தமது தொழில் நிறுவன உபநிலையங்களை நிறுவியுள்ளன. ஏனைய பல தொழில் நிறுவனங்களும் இந்த நாடுகளை இப்போ நாடி ஓடத் தொடங்கியுள்ளன. Motorola தொழில் நிறுவனம் தற்போது 150 மிகத்திறமை வாய்ந்த தொழிலாளர்களை பங்களூரில் வைத்து (Iridium Satelite Network Programming) விண்கலத்திற்குத் (Satelite) தேவையான கணனி இயக்கி நிரலைத் தயாரிக்கிறது. இதில் முக்கியமாக இன்னுமொரு அதிர்ஷ்டத்தை இந்தியாவும் அதனைச் சூழ்ந்துள்ள வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும் கொண்டிருக்கக் காணப்படுகின்றன. உதாரணமாக ஒரு அமெரிக்கத் தொழில் நிறுவனம் தனது கணனி இயக்கியில் சில மாற்றங்களைச் செய்ய விரும்பி அதனை அமெரிக்காவிலுள்ள கணனி இயக்கித் தொழில் நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பினால் ஆகக் குறைந்தது இரண்டு நாடகள் தமது பிரச்சினையைத் தீர்க்க எடுக்கிறது. ஆனால் அதே பிரச்சினையை அத்தொழில் நிறுவனம் அன்று சட்டலைட் மூலம் இந்தியாவிற்கு அனுப்பினால் நேர வித்தியாசம் காரணமாக அவர்கள் அதனை அமெரிக்க நேரப்படி அன்றிரவே முடித்து சட்டலைட் மூலம் அனுப்பிவிடுவதனால் மறுநாள் காலை அமெரிக்க தொழில் நிறுவனம் தமது பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக இருப்பதனால் மேலும் வளர்ச்சியடைந்துவரும் இந்திய உபகண்ட நாடுகள் நன்மை பெற வழிவகுப்பதாக கலாநிதி றிச்சட் கீக் (Dr Richard Heek) University of Manchester தமது ஆராய்ச்சி மூலம் கூறுகிறார். இது இப்படி இருப்பினும் வளர்ச்சியடைந்து வரும் இந்திய உபகண்ட கம்பியூட்டர் தொழிலாளர் பற்றி விமரிசிக்கையில், அவர்களிடம் Management & Design குறைபாடுகள் காணப்படுவதாகவும், அதனால் வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்தே இதனை நிவர்த்தி செய்வதற்கு அங்கு செல்ல வேண்டியுள்ளதாகவும் கூறுகின்றார். இந்நிலை சில காலங்களில் மாறக்கூடும் எனவும் கூறப்படுகின்றது. மேலும் தற்போதைய கணனி இயக்கி வியாபார நிலைமைகளை ஆராய்ந்த American Scientist விஞ்ஞானப் பத்திரிகை, விமர்சனம் கூறுகையில் தற்போதைய கணனி இயக்கி வயாபாரத் தொகை 9280 கோடி அமெரிக்க டொலர்கள் ($92.8 billon) ஆகக் கணக்கிடப்படுகிறது. இதில் இந்தியா மட்டும் செய்யும் கணனி இயக்கி வியாபாரம் 48.3 கோடி அமெரிக்க டொலர் ஆகும். இருப்பினும் அடுத்த நூற்றாண்டில் இவ்வியாபாரம் முற்றுமுழுதாக இந்தியாவிடமும் அதனைச் சூழவுள்ள நாடுகளான பிலிப்பைன்ஸ், மலேசியா, இலங்கை போன்ற நாடுகனிடமும் தனது பிடியை இழந்துவிடும் எனவும் அமெரிக்க கணனி இயக்கி நிறுவன வியாபாரங்கள் முடிவுக்கு வருவதாகவும் இவ் விஞ்ஞானப் பத்திரிகை கூறுகின்றது.

இந்தியாவில் பல சிறிய தொழில் நிறுவனங்கள் கணனி இயக்கி வியாபாரத்தைத் தொடக் கியுள்ளன. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கணனி இயக்கி தான் லண்டன் புகையிரதப் (London Underground) பிரயாணத் தேவைகட்குப் பாவிக்கப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

இன்று தமிழீழத்திலிருந்து இங்கு வந்துள்ள பலரும் கணனிப் படிப்பில் நாட்டம் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள், பலர் கணனித் துறையில் பட்டதாரிகளாகவும் நிபுணர்களாகவும் காணப் படுகிறார்கள். இவர்களும் இச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி ஈழத்திலும் பலதரப்பட்ட கணனி சம்பந்தமான தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்க முன்வரவேண்டும். தமது அறிவின் பயன் தமது தாய்நாட்டிற்கும் சென்றடைய முயற்சிகள் எடுக்கவேண்டும்.

(பொருண்மியம்- விருத்தி 1)

தமிழீழ மண்ணின் வளங்களை, நல்லமுறையில் எவ்வாறு பயன்படுத்தலாம், பேணலாம் என்பது சம்பந்தமாகவும், எமது மண்ணின் பொருளாதார நல்வாழ்வை எவ்வாறு கட்டி எழுப்பலாம் என்பது சம்பந்தமாகவும் களத்தில் பத்திரிகையில் வெளியிடுவதற்கு கட்டுரைகள், ஆய்வுகள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகட்கு: 0181 365 0249

**TEEDOR - UK**
**202 Eelam House**
**London SE1 4QB**

## தளிர்மாலை 97

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படும், பிரித்தானியா வாழ் தமிழ்ச் சிறார்கள் பங்குபற்றும் தளிர்மாலை நிகழ்ச்சி இரண்டாவது தடவையாக இவ்வருடம் செப்டம்பர் மாதம் 27ம் திகதி சனிக்கிழமை Highbury Grove School மண்டபத்தில் சிறப்பாக நடந்தேறியது. பிரபல சமூகசேவையாளரான சட்டத்தாணி திரு சிதம்பரப்பிள்ளையவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் அவரது மனைவியாரான டாக்டர் திருமதி மகேஸ்வரி சிதம்பரப்பிள்ளையவர்கள் வெற்றிபெற்ற பிள்ளைகளிற்கு பரிசுகளை வழங்கினார்




இதில் பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களிடையே பேச்சுப் போட்டி, பொது அறிவுப் போட்டி, சித்திரப் போட்டி, மாதிரி அமைத்தல் போட்டி, வினோத உடைப் போட்டி என்பன நடாத்தப்பட்டன. பேச்சுப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களது பேச்சுத்திறன் சென்ற தடவையிலும் பார்க்க இம்முறை உயர்ந்திருந்ததை பார்க்கக்கூடியதாக இருந்தது. முதல் பரிசுபெற்ற மாணவர்கள் தங்கப் பதக்கங்களை பரிசாகப் பெற்றுச் சென்றனர்.

இவற்றுடன் இலண்டனில் இயங்கும் தமிழ்ப் பாடசாலைகளான அருண் உதயம் தமிழ்ப் பாடசாலை, வோல்த்தம்பொறஸ்ட் தமிழ்ப் பாடசாலை, கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை, பிறன்ற் தமிழ்ப் பாடசாலை, பிறன்ற் ஏசியன் பாடசாலை, இலண்டன் ஆங்கிலோ தமிழ் அமைப்பு ஆகியன ஒவ்வொன்றும் பதினைந்து நிமிடத்திற்குட்பட்ட வெவ்வேறு கலை நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கியிருந்தன. எல்லா நிகழ்ச்சிகளுமே ஒன்றை ஒன்று விஞ்சும் அளவிற்கு மிகவும் தரம் வாய்ந்த வையாகவும் திறம்பட ஒழுங்கமைக்கப் பட்டவையாகவும் அமைந்திருந்தன. அவற் றுள் பாரதியார் பாடல்களிற்கு நடனம் ஆடிய வோல்த்தம் பொறஸ்ட் தமிழ்ப் பாடசாலை மாணவர்களது நிகழ்ச்சி அதிக பார்வையாளர்களின் அபிமானத்தைப் பெற்ற நிகழ்ச்சியாகத் தெரிவு செய்யப்பட்டு தளிர்மாலை 97 விருதினைப் பெற்றுக் கொண்டது. ✳



கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் வழங்கிய கனவுலகில் ஓர் காட்சி நாடகத்தில் ஒரு காட்சி

# எம்மண் ஏறிவருவோனே!
# வருகுது மாரிகாலம்
# உனக்கினி ராகுகாலம்.



## உலைக்களம்

- வியாசன்

ஆவணிமாதம் தாவணி போர்த்துளது.
இடிக்கும், மின்னலுக்கும்
இனிவரும் நாட்கள் கூத்தாடும்.
மேகம் எம்தலைக்குமேலே மூட்டமிட்டு
உருகியுருகிச் சொரியும் பெருமழை.
வேர்காய்ந்து கிடந்தனயாவும் விழிதிறந்து
ஊரெல்லாம் பச்சைநிறப்பட்டுடுக்கும்.
சிரித்துக்கொள்ளும் எம்திருவாசல்கள்.
மாறிமாறிக் கோடையும், மாரியும் கொலுவேற
கோடை வெய்யிலிற் கொதிப்பதும்
மாரி மழையிற் குதிப்பதும்
வாழ்வின் இரண்டு பக்கங்களான வழமை.
நேற்றோடு போயின அக்கினிநாட்கள்.
காற்றள்ளிக் கொட்டிய புழுதி கலைந்துபோக
இனிச்சீதளக் காற்றின் இதமான வருடல்.
மேகமே! இறங்கு எம் தேசத்தின் தலையில்.
தாகமடங்கித் தவித்தவாய் குளிரட்டும்.
அகதிக் குடியிருப்புக்கள் ஆனந்தம் கொள்ள
நீரற்ற கிணறுகள் நிரம்பட்டும்.
இனியாவது குளித்திருக்கட்டும் குழந்தைகள்.
கூரையற்றிருக்கும் அகதிமுகாம்களின் மேலே
நீரையள்ளிக் கொட்டாதே முகிலே.
பாவம் தமிழர்கள் பட்டதுயர் போதும்
மேயாத கூரைவிட்டு முற்றத்திலிறங்கு மழையே.
காடேறி வீட்டிலிருந்து கலைத்தாள்.
பூர்வீகப் பூமிவிட்டு எவர்தான் ஓடாதார்?
ஓடியோடி இடையிலொரு துண்டுமின்றி
ஆடிப்போனது தமிழரின் வேர்கள்.
வேர்த்தலையில் நீர்தெளிப்பாய் மாரியே!
புதிதாய் முளைக்கட்டும் எம்பொன்னாடு.
ஏறிவரும் தேரின் சக்கரங்கள் புதைய
இடையில் "ஜயசிக்குறுய்" நீரிலமிழ்ந்து போகும்.
சபித்தவாய்ச்சாபங்கள் பலிக்காமற் போகாது.
நேற்று, மகிழ்ச்சிமத்தாப்பு விரித்திருக்க
ஏணையாடும் குழந்தையென இருந்தோம் நாம்.
கோபுரக்கலசமென உச்சத்திருந்தது எம்வாழ்வு
ஆனந்தம் கையளைந்து கொள்ள நிமிர்ந்திருந்தோம்.
எல்லாம் இல்லாமற் போக
இடியிறங்கியது எம் தலையில் –
காட்டெருமையென எம்வயல் புகுந்து
காலால் மிதித்தனர்.
ஏனென்று கேட்டபோது இடித்தனர்.
வெடிகொளுத்திப் போட்டோம்.
வெகுண்டு விண்ணுக்கும் மண்ணுக்கும் குதித்தனர்.
அன்றுதான் தொட்டது அழிவு.
சுமக்கமுடியாத பாரம் தோள்களில்.
எனினும் களைக்கவில்லை நாம்.
குருத்தோலையும் காவோலையும் ஒன்றாகக் கருகுகின்றன.
எந்நாளும் வந்துபோக முடியாதென்று
இப்போது எம்மூரிலேயே குடியிருக்கின்றான் இயமன்.
எருமைமாடு இளைத்துவிட்டதாம் நடந்து.
எத்தனையென்றுதான் சுடலைக்குக் காவுகின்றது.
அலுத்துவிட்டது. அடிவளவுக்குள்ளேயே கொழுத்துகின்றோம்.
ஆயினும்,
காற்றிலணையும் தீபமல்ல எம்கையிலிருப்பது.
இது சோதிப் பிழம்பு.
புயலுக்கும் அணையாத புதுவிளக்கு.
உயிர்விட்டேற்றிய உரிமைவிளக்கு.
எண்ணையற்றுப் போனாலும் இந்த விளக்கு எரியும்.
பகையே! வழிதிறக்கவரவில்லை நீங்கள்
ஐயோ பாவம்.
உங்கள் குழிதிறக்க வருகின்றீர். வருக.
இந்த மழைகாலம் உங்களுக்குப் படுமோசம்.
மந்திரித்து நூல்கட்டி
வெள்ளரசில் நேர்த்திகட்டி
வீட்டில் விடைபெற்று வருக
தாண்டிக்குளம்,
இறம்பைக்குளம்,
புளியங்குளம்,
கனகராயன் குளமென்று
எல்லாக் குளத்துள்ளும் இறங்கத் துடிக்கின்றீர்.
ஏதோவொரு குளத்தோடு இல்லாமற் போவீர்.
இந்த மழைகாலம் முடியமுன்னர் இதுநடக்கும்.
தர்மம் எத்தனைகாலத்துக்குத்தான் தலைகுனியும்?
ஆணவம் தலைக்கேறியதனைத்தும் அழியும்.
கோவணமுமின்றித் தவிக்கும்.
இது வரலாறெழுதிய தீர்ப்பு.
கடைசித்தமிழனும் அழியும் நாளுக்காகக் காத்திருப்பவர்களே!
எழுந்து நடவுங்கள். இது நடக்காது.
எத்தனைபேரின் கால்களின் கீழே
இத்தனை வருடங்களாகக் கிடந்தது எம்மண்.
செத்தாபோனது எம்திருநாடு?
பிரபாகரனையல்லவா பிரசவித்துக் கொண்டது.
எல்லாளனை வேலாலெறிந்து வீழ்த்திவிட்டு
அப்பாடா என்று நீங்கள் ஆசுவாசப்பட்டபோது
காலமொன்றுக்காகக் காத்திருந்தது எம்தாயகம்.
இன்று நீண்டகாலத்தின் பின் நிமிர்ந்துளது.
கைகட்டிச் சேவகம் செய்து
கொடுத்ததை உண்டுகிடக்கும் சதுப்புநிலமல்ல...
எம் அன்னைமடி.
இது கருங்கல்லுப்பூமி.
உடைந்து சிதறுமேயன்றி... உடல்வளைத்துக் கொள்ளாது.
கற்றிவளைத்தாயானால் குடேறும்.
கற்பனைக்குமெட்டாத விலைகொடுத்து
அற்புதம் விளைக்கும்.
எல்லாம் முடிந்ததென இருக்க இடிமுழங்கும்.
மாங்குளத்தைப் பிடிக்கவா வருகின்றாய்?
குறித்துக்கொள்.
மதவாச்சியையும் தந்து போவாய்.
புலிகளுக்குப் புண்ணாக்குத்தீத்துவேனெனப் புறப்பட்டவனே!
இயமனுக்கே இடியப்பம் தீத்தியவனடா தமிழன்.
வன்னிமண்ணிலிருந்து ஒரு வரலாறு ஆரம்பம்.
"கண்டிவீதி" தான் அதற்கான முன்னுரை.
சும்மா உறங்கிக் கிடந்தன எம்காடுகள்.
குண்டடித்து விழித்தெழச் செய்தாய்.
நன்றியுனக்கு.
இனிக் காடுகள் போரிடும்.
இந்தியச்சிப்பாய்களும் இங்கேதான் "ஞானம்" பெற்றார்கள்
நீயும் வருகின்றாய் உனக்குமது கிட்டும்.
அடிமுடியறியாதது தொடுவானம்.
அளந்து கணக்கெடுக்க முடியாததை



எப்படி அழிக்கமுடியும்?
விடுதலை.
புலிகளுக்கு இதுதான் பெரியபிடிமானம்.
எமக்குவேண்டும் விடுதலை என்றதும்
என்னது? அதனுட்பொருள் யாதெனச்
சுமக்கவேண்டிய சுந்தரம் அறிகிலார்
சுதந்திரத்தை எங்கெலாம் தேடுறார்.
சிவக்கும் வைகறை வானத்தில் ஒளியெனச்
சிரிப்பதான நிலையது விடுதலை.
தமக்குவேண்டிய தனைத்தும் தான்பெறும்
சக்திகைவரல் விடுதலை என்பதாம். ♦




### தியாகம், இலட்சியம் குழைத்த அன்னம்

அம்மா அப்பாவைப் பிரிந்து சென்று
தாயக மீட்பில் - புலிப்படை இணைந்தீர்
தியாகம், இலட்சியம் குழைத்த அன்னம்
புன்சிரிப்புடன் நீவிர் புசிப்பது புரியும்
பகைவன் பாதை திறப்பில் படுதோல்வி கண்டான்
அவன் ஆப்பிழுத்த குரங்காய் அகப்பட்ட சிரிப்பா?
நீவிர் போதுமே கொடிய நீசரை ஒழித்திட
தாயக விடியல் தேடும் தற்கொடை வள்ளல்களே!

**–காரவஹர் செ. கணபதிப்பிள்ளை, யேர்மனி.**

### தேசம் காக்க

பசி என்று கையில்
உணவெடுத்து
பாசத்தால் உண்ண மறந்து
உள்ளத்து சிரிப்போடு
உலாவரும் வேங்கைகளே
வீட்டிற்குள் வாழ்ந்த நீங்கள்
நாட்டைக்காக்கும் காலமிது–
கயவனை எதிர்த்து நிற்கும்
கண்ணாளன் பிள்ளைகளே!

**–லே. டெசி, மணற்காடு (தமிழீழம்).**

### கல்லுக்குள் ஈரம்

கல் நெஞ்சம் கொண்டவர்களா இவர்கள்!
இல்லை, போர்க்களமாடிட புயலாயெழுந்த புலிகள்.
புன்னகைக்கு என்ன எதிராளிகளா?
இல்லை, விடுதலைக்காய் சற்றே ஒதுக்கிட்டவர்கள்
பசிக்கும் ருசிக்கும் அப்பாற்பட்டவர்களா?
இல்லை, அறுசுவை அடக்கிய ஆன்மீகவாதிகள்.
விதியின் அடக்குமுறைக்குள் அகப்பட்டவர்களா?
இல்லை, மதிவழி புறப்பட்ட புரட்சிப் பூக்கள்!

**~ த. முகுந்தன், இத்தாலி.**

### களச்சோறு

மழலைப் பருவத்து நிலாச்சோறு அல்ல
மணநாளின் பால்சோறும் அல்ல
கானகத்து நடுவே இது களச்சோறு.
ஒரு தட்டில் உணவருந்தி, எமக்கு
உடன் பிறப்புக்கள் உணர்த்துவதென்ன?
ஒரு தலைவன், ஒரு லட்சியம்!
தம் உயிர் போயினும் - ஒரு நாள்
தமிழ் ஈழம் நிச்சயம் என்றா?

**~ கைலம்மான், பிரான்ஸ்.**

### சுதந்திரப் பறவைகள்

புன்முறுவல் பூத்த வரிப்புலித் தங்கையரே
எவ்வேளையிலும் எதிரியின் கணை வந்து
களத்திலே உம் உயிர் பிரியலாம்–எனினும்
உங்களால் மட்டும் எப்படி சிரிக்க முடிகிறது!
நீவிர் மரணத்துக்கு அஞ்சிடா மங்கையரோ
இல்லை, ஜயசிக்குறுயில் எதிரியை
அழித்ததாலா?
தலைவன் படை இணைந்த உங்களுக்கு
வெற்றி நிச்சயம் என்பதாலா?

**~பகுத்திநகர் நித்தி, லண்டன்.**

### களமாடி மீண்ட களிப்பு!

வெண்டைப் பிஞ்சின்
விரல்முனை கொண்டு
குண்டின் கொண்டை திருகி
எதிரியின் மண்டை
உடைத்துநொருக்கும்
சுதந்திரப் பறவைகளே! – இதழில்
களமாடி மீண்ட களிப்போ!!

**–தடா. ஒ. சுந்தரம், சென்னை–600020**

### இதுவே எமது உறவு

நீ யார் நான் யார் என்று
தெரியாது இருந்த காலம் அன்று.
நம் தலைவன் வழியில் மலர்ந்திட்ட
அபூர்வ சகோதரிகள் நீங்கள் இன்று.
ஒரு தட்டில் உணவுண்ணும் பாசமும்
உங்களின் புன்னகையும்
நாளைய சந்ததிக்கென கொடுத்தவையோ!

**~மணற்காடு ப. நிமலதாஸ், இத்தாலி.**



### மறவர் மகள்

உனது சிறகுகளை விரித்து
கூண்டைவிட்டு வெளியில் பறந்தாயே
உன் வீரம் கண்டு
சிங்கமும் கர்ச்சிக்க அஞ்சும்
மரநிழலின் ஓரம் அமர்ந்து
ஒரு தட்டில் உண்டு மகிழும்
மறவர் பெற்றெடுத்த வீர மங்கையரே
எங்கள் பாலகரும் வணங்கும் புரட்சிப் பெண்களே
உலகம் முழுதும் உம் வீரம் பேசும்!

**–சோபனா சுப்பிரமணியம், டென்மார்க்.**

### எதிரியை வீழ்த்துவோம்

வானம் பொய்யாது பொழிந்துவிட்டால்
நாம் மண்ணில் பல விந்தை செய்வோம்
தடைகள் ஆயிரம் போட்டாலும்
தரையில் ஆயுதம் போடமாட்டோம்
எதிரியை விரட்டி அனுப்பிவிட்ட
ஆனந்த மிகுதியினால் பிடிசோறு
பரிமாறி உண்டு மகிழ்வோம்!

**–செல்ல. முத்துக்குமாரசாமி, யேர்மனி.**

### உள்ளம் எப்போது சிரிக்கும்

இவர்களின் உதடுகள் புன்னகைப்பது
இலட்சிய வேட்கையிலே
இவர்கள் கைகள் ஒரு கோப்பையில்
இருப்பது
எதிரியை ஒன்றுபட்டு அழிப்போம் என்று
இந்த இலட்சிய வேங்கைகளின்
வனவாசம் எம் தேசத்தின் விடியலுக்காய்,
நிச்சயமாய் தமிழீழம் மலரும்
அப்போது இவர்களின் உள்ளம் சிரிக்கும்.

**–அனுஷா இராசரட்னம் (சுதுமலை) யேர்மனி.**

### காலத்தின் கோலங்கள்

உண்மையுள்ளங்கள்
உணர்வுகளின் உறைவிடங்கள்
பொறுமையும் புன்னகையும் மாறாப் பெண்மணிகள்
போர்க்களத்தில் மட்டும் புயலாகிய பெண்புலிகள்
பசிக்குப் பாதி பழஞ்சோறானாலும்
மண்ணின் வாசனையால் மனம் நிறைந்தவர்கள்
நாளை விடியலுக்காய் தம்மை விளைத்தவர்கள்!

**–த. தனீஷ், இத்தாலி.**

### யார் பெறுவார் சொல் தோழி!

அன்னை மடியிருந்து அரவணைத்துண்ட சுகம்
தந்தை தோளமர்ந்து தலைசாய்ப் படுத்த சுகம்
கள்ளமில்லாப் பள்ளி வாழ்வில் களித்திருந்த சுகம்
கன்னி வாழ்வில், கற்பனையில் கடந்த சுகம்
இத்தனையும் ஒரு சுகமோ! தோழி நீ சொல்லு.
அண்ணனின் ஆணைகேட்டு வீறுகொண்ட சுகம்
காடுகளை வீடாக்கி கைமாறி உண்ட சுகம்
புலியாகி எதிரிகளை புறமோட வைத்தசுகம், யார் பெறுவார் சொல் தோழி!

**–இர. நடா**

### கலங்காத கண்மணிகள்

ஒரு கோப்பையிலே எங்கள் பசி தீரும்
ஒரு கொள்கையிலே எங்கள் உயிர் வாழும்
கானகத்தில் எங்கள் சிரிப்பொலிகள்
களம் வரையில் நிலைத்து நிற்கும்
பாடி வரும் பறவை எல்லாம்
பழக வரும் எம் அருகே
மோத வரும் பகைவர் யாரும்
மீள்வதில்லை அழிந்தே போவர்!

**–சு. ஜெகதீஸ்வரன், யேர்மனி.**

### தமிழீழத்தின் பிள்ளைகள் நாம்

தமிழீழத்தின் விடிவுக்காய்
தலைவன் வழி தொடர்பவர்கள்
ஒரு தாய்மடி பிறக்காவிடினும்
ஈழத்தாயவள் பிள்ளைகள் தாமென–
ஓர் தாய் பிள்ளைகளாய்
புன்னகை தவழும் முகத்திலே
புதியதோர் உறவு புனைகிறார்கள்!

**–பாலசிங்கம் முருகதாசன், யேர்மனி.**

### வாசகர் கடிதம்:

(இந்தியா–புதுச்சேரியைச் சேர்ந்த திரு ச. வேல்முருகன் அவர்களது கடிதத்தின் ஒரு பகுதி)

அன்பின் ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

........ இனவாத பூதத்தினது அழிவுகள், மக்களை கொன்றொழித்து தம்மை தன் இன மக்களிடையே நிலை நிறுத்திக் கொள்ளச் செய்யும் தந்திரங்கள் அனைத்தும் புலிகளின் தகவல் தொடர்புகளால் மட்டுமே உடனுக்குடன் உலக மக்களுக்கு எடுத்தியம்பப்படுகின்றது. அந்த வகையில் தங்கள் 'களத்தில்' இதழ் பெரும்பங்காற்றி வருகிறது.

தமிழீழத் தாயகச் செய்திகளைப் படிக்கும் பொழுது உள்ளம் வெதும்புகின்றது. சிங்கள அரசின் கொடூர கரங்களில் இருந்து மக்களையும் தாய் நிலத்தையும் மீட்கப்பாடுபடும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் தனித்துவத்தையும், தளராத உறுதியுடனும் மனோ பலத்துடனும் மக்கள் ஆதரவுடனும் போர்ப் பரணி பாடி வருபவர்களை எண்ணும்பொழுது ஓரளவு ஆறுதல் கிடைக்கின்றது.

தங்கள் இதழின் வாயிலாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயல்பாடுகளைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள முடிந்தது. சிறுகதையும் கவிதைகளும் சிறப்பாக உள்ளன.

தொடர்ந்தும் தங்கள் இதழ் வளர்ந்து சிறக்க தமிழினத்தின் சார்பில் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்.


### ஆக்கங்கள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி:

யேர்மனி–நடா டோட்மூன்ட், வ. மனோகரன், கவிக்குயில், செ. கேதீஸ்வரன், எம். சுகுமாரன், திருமதி. எம். சீதா, எஸ். கமலநாதன், பாலச்சந்திரன், சிறீராமசோதி, திருமதி ரஜனி பாலா, பிரேமன் நண்பர்கள், ஜீவன் சுந்தரமூர்த்தி.
டென்மார்க்– சுதாச்செல்வி
இத்தாலி – டெமன்வோல்ட், லே. ராஜன், சி. பிரதீபன், ப. நிமலதாஸ்.
லண்டன்– ஜேம்ஸ்
பிரான்ஸ்– தனம்
சி. சத்தியகுமார், செல்லம் இராஜா, வேதகா, வல்வை கித்துள்.

# பன்னிரு வேங்கைகளின் 10ம் ஆண்டு நினைவாக



லெப்.கேணல் புலேந்திரன்




லெப்.கேணல் குமரப்பா



மேஜர் அப்துல்லா



கப்டன் ரகு







கப்டன் பழனி



கப்டன் கரன்



கப்டன் நளன்




கப்டன் மிரேஸ்



லெப். தவக்குமார்



2வது லெப். ஆனந்தகுமார்



2வது லெப். ரெஜினோல்ட்



லெப். அன்பழகன்